DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative, homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

UTHAYAN 416.301.5555
PYRAMID GROUP
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1451 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 26, 2024

# மொன்றியால் மாநகரில் 40 அமைப்புக்கள் ஒன்றிணைந்து பிரமாண்டமான முறையில் நடத்திய 'தமிழ் மரபுத் திங்கள்' விழா

## கனடியப் பிரதமர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தனது அன்பைப் பொழிந்து சென்றார்



கடந்த 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மொன்றியால் மாநகரில் 40 அமைப்புக்கள் ஒன்றிணைந்து பிரமாண்டமான
முறையில் நடத்திய 'தமிழ் மரபுத் திங்கள்' விழா காலை தொடக்கம் மாலை வரை சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விழாவில் எமது ஸ்காபுறோ தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி உட்பட தனது பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் சகிதம் கலந்து கொண்ட கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் தனது
உரையில் அவரது அன்பையும் பொழிந்து கனடா வாழ் தமிழ் மக்கள் நிகழ்த்தும் சாதனைகளுக்கு தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.



கண்ணைக் கவரும் நடனங்களும் காதுக்கினிய பாடல்களும் நவரசங்களை அள்ளி வழங்கிய பாரம்பரிய நடனங்களும் கருத்தாளமிக்க உரைகளும் இடம்பெற்ற மேற்படி
விழாவில் அழகிய முறையிலும் ஏற்பாடு செய்யப்பெற்று கலந்து கொண்ட சுமார் 3000 பேருக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்கப்பெற்று நன்கு உபசரிக்கப்பெற்றார்கள்.

# மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு ஜனாதிபதியும், நிராகரிக்கப்பட்ட அமைச்சரும், இந்த சபையும், மக்களின் உண்மையான கருத்துக்களை வெளிவராமல் தடுக்க முயற்சிக்கின்றது

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் கொண்டுவரப்படவுள்ள நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சம்பந்தமாக விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதன்கிழமையன்று இலங்கை நாடாளுமன்றில் ஆற்றிய உரை.
நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சம்பந்தமாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விவாதம் தொடர்பாக நிலையியற் கட்டளை 50.2 சரத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

(உள்ளே விபரமான உரை 21ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT: Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
ACCOUNTING: Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 | 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 | 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

பாதுகாப்பாக பணம் செலுத்துதல், பாதுகாப்பான மாநகரம்:

# உங்கள் தனிநபர் தரவுகளை பாதுகாத்தல்



உங்கள் தனிநபர் தரவுகளை இன்னும் சிறப்பாக பாதுகாப்பதற்காக, இனிமேற்கொண்டு கிரெடிட் கார்டு தகவல்கள் அல்லது தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது களத்தில் வைத்து செய்யப்படும் பணம் செலுத்தல்களை ஏற்பதற்கில்லை. நமது ஆன்லைன் பணம் செலுத்தும் விருப்பத்தெரிவுகளை உபயோகிக்குமாறு அல்லது வாடிக்கையாளர் சேவை மையங்களில் நேரடியாக செலுத்துவதை நாங்கள் ஊக்கப்படுத்துகிறோம்.

இந்தப் புதிய மாற்றங்களின்பேரில், கிரெடிட் கார்டு தகவல்கள் தொடர்ந்து அந்தரங்கமானதாக இருக்கும்; அதே சமயத்தில் கிரெடிட் கார்டு மோசடிகளின் ஆபத்தினையும் குறைக்கும்

மேலும் தகவல்களுக்கு, **Brampton.ca** ஐப் பார்க்கவும் அல்லது எங்கள் வாடிக்கையாளர் சேவை அணியை **311** இல் தொடர்பு கொள்ளவும்.

BRAMPTON



## உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

- Painting
- Bathrooms
- Kitchens
- Decks
- Flooring
- Basements
- Pot lights
- Accent Walls

**வேலை வாய்ப்புக்களும் உள்ளன.**

Contact us 416.706.8160





Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# தமிழரசுக் கட்சியின் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலான தவறுகள் புதிய தலைவரினால் சீர் செய்யப்படவுள்ள வாய்ப்புக்கள் மிக அரிதே!

தமிழ் மக்கள் இது வரை அடைந்த துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்க தொடங்கி விட்டனர். இதனால் அரசு அச்சத்தில் மூழ்கியுள்ளது. இதுவும் தமிழர்களுக்கான பாதை திறக்க வழியாகும். ஆகவே நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறிதரன் சிவஞானம் தெரிவித்துள்ளதாக செய்தியொன்று எழுதப்பட்டுள்ளது. அத்துடன் அவர் தெரிவிற்கான வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சி சென்று அங்கு மாவீரர்களின் நினைவிடங்களுக்குச் சென்று அவர்களுக்கு மரியாதையையும் அஞ்சலியையும் செலுத்தினார். அங்கு அவர் உரையாற்றும் போது "மாவீரர்களின் கனவு நனவாகும் வரை நாம் உழைப்போம்' என்று தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்பதாக திருகோணமலையில் அவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முடிவுகள் வெளியாகிய பின்னர் சுமந்திரன் போன்ற அனைவரோடும் சேர்ந்து தமிழர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உழைப்போம் என அறைகூவல் விடுத்துள்ளார்.

ஆனால் சுமந்திரன் அவர்களோ மாவீரர்களின் கனவு 'கனவாகவே போகட்டும்' என்று சபதம் எடுத்தவர். "விடுதலைப் புலிகளின் பல அரசியல் மற்றும் இராணுவ நகர்வுகளை தவறு என்று இன்னமும் உரத்த குரலில் சொல்லித் திரிகின்றவர். இவ்வாறானவர் எவ்வாறு சிறிதரன் சிவஞானம் அவர்களோடு சேர்ந்து அரசியல் செய்யப்போகின்றார் என்பது எம்மால் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

தமிரசுக் கட்சி ஆரம்பிக்கப்பெற்று 75 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் வரை தலைமை வகித்த எவராலுமே, தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கையான 'சமஸ்டி'யை வென்றெடுக்க இயலவில்லை. அவர்களது பாராளுமன்ற அரசியல் நகர்ந்து சென்ற காலத்தை விட எமது விடுதலை இயக்கங்களின் நாற்பது வருடத்திற்கும் மேலான ஆயுதப்போராட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்களாக விடுதலைப்புலிகளின் ஆசீர்வாதத்தோடு பாராளுமன்ற சென்று அமைதியாக இருந்து விட்டு பின்னர் விடுதலை புலிகள் இயக்கம் மீதான தாக்குதல்கள் 2009ம் ஆண்டு நடத்தப்பட்ட பின்னர் அவர்களின் பாராளுமன்ற அரசியல் எந்தப் பக்கம் சென்றது என்பதற்கு அப்போதை தலைவர்கள் 'அடையாளங்களாக' இன்னும் விளங்குகின்றார்கள்.

முக்கியமாக தங்களிடம் கேள்விகள் கேட்பதற்கு மக்களைத் தவிர 'ஒருவரும்" இல்லை என்று எண்ணிக்கொண்டு ரணிலின் அரசாங்கத்தையும் அவரையும் காப்பாற்றத் துணிந்த அரசியல் 'சாணக்கியத்திற்கு' பரிசாக தற்போது சாணக்கியன் என்னும் பாராளுமன்ற உறுப்பினர் கிட்டியுள்ளார். அவரது அரசியல் நகர்வு மற்றும் பாராளுமன்ற பிரசன்னம் போன்றவை. தமிழரசுக் கட்சியின் பல அங்கத்தவர்கள் நினைப்பது போன்றே. 'அரசியல் அறிவு' மற்றும் 'ஆங்கிலப் புலமை' சர்வதே பயணங்களின் அனுபவங்கள்' என்ற அவர்களது பார்வை மழுங்கியதாகத் தெரியவில்லை.

இவ்வாறு "சுமந்திரன் ஒருவரே சர்வதேசம் வரை சென்று வாதிட்டு பேசக்கூடியவர்' என்று கூறுகின்றவர்கள். விடுதலைப் புலிகள் தங்களிடத்தில் கொண்டிருந்த மக்கள் ஆதரவும். இராணுவ பலத்தையும் அவர்கள் நடத்திவந்த அரசியல் நகர்வுகளையும் மறந்தும் மறைத்தும் தங்கள் அரசியலை நடத்துவதும் ஏன் என்று எமக்கு புரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறான 'மாயைகள்' நிறைந்த தமிழர்களின் எதிர்கால அரசியலில் தமிழரசுக் கட்சி என்ன பங்கு வகிக்கப்போகின்றது என்பதற்கு அரசியல் அவதானிகளும் காத்திருப்பது போலத் தெரிகின்றது. அவர்களைப் போன்றே நாமும் காத்திருப்போம்.

எனினும். தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான சிறிதரன் சிவஞானம் தனது உரையில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு மதிப்பளித்து நாம் காத்திருக்க வேண்டிய தேவையும் உள்ளது.

அவர் தனது உரையில் "தமிழர்களின் தேசிய அபிலாசைகளை உலகம் புதிய பரிமாணத்துடன் சிந்திக்க முற்பட்டுள்ளது. நாம் இழந்த ஆத்மாக்கள் இப்பொழுது எமக்கு உத்வேகத்தை தருகிறன. .நாம் எந்த நோக்கத்துக்காக எமது உறவுகளின் உயிர்களை இழந்தோமோ அந்த நோக்கங்கள் இன்னும் அழிந்து போகவில்லை. சிங்கள மக்களுக்கு முன்பே நமது தமிழினம் இங்கு வாழ்ந்துள்ளது. நாம் இங்கு பல அடையாளங்களுடன் வாழ்ந்திருக்கிறோம்.

ஆகவேதான் இழந்த இறைமையை தான் நாம் மீண்டும் பெற போராடுகின்றோம். எமது மொழி , இடம் , கலை பண்பாட்டு இவைகள் எமது தமிழ் தேசிய அடையாளத்தை பற்றியுள்ளது.நாம் பல சவால்களை சந்தித்து இன்னும் மனிதர்களாக இருக்கிறோம் என்றால் நாம் அறத்தின் மீதும் தர்மத்தின் மீது பற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம்.இலங்கை அரசுக்கு ஒரு செய்தியை கூறுகின்றோம்' என்று அவர் தனது உரையில் கூறுகின்றார்.

ஆனால் நாம் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் இடம்பெறுவது இனங்களுக்கிடையிலான போட்டி அல்ல. ஆள்கின்றவர்களுக்கும் ஆளப்படுகின்றவர்களும் இடையிலான போட்டி என்பதை எமது புதிய தலைவர் புரிந்து கொள்ள வேண்டும். தமிழரசுக் கட்சியானது பல தடவைகள் ஆள்கினறவர்களாக தமக்குத் தெரிந்த தலைவர்களைக் காப்பாற்றியது. இது கடந்த காலத்திலும் அண்மைக் காலத்திலும் இடம்பெற்ற 'தவறுகள்' என்பதை தமிழரசுக் கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும். எனவேதான் நாம் குறிப்பிட்டுச் சொல்கின்றோம்.

"தமிழரசுக் கட்சியின் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலான தவறுகள் புதிய தலைவரினால் சீர் செய்யப்படவுள்ள வாய்ப்புக்கள் மிக அரிதே!" என்று.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# "இந்த மண்ணிலே நாம் பல உயிர்களை தியாகம் செய்திருந்தும் இன்னொரு சுதந்திரமான காற்றை சுவாசிக்க முடியாமல் இருக்கிறோம்"

## மன்னாரில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறிதரன்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழ் மக்கள் பெற்ற துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்க தொடங்கி விட்டனர். இதனால் அரசு அச்சத்தில் மூழ்கியுள்ளது. இதுவும் தமிழர்களுக்கான பாதை திறக்க வழியாகும். ஆகவே நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கடந்த 21 ந் திகதி தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து மன்னார் மாவட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர் களினால் நேற்று வியாழக்கிழமை(24) மாலை வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

கட்சியின் மன்னார் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்...

மனிதர்களுடைய வாழ்விலே பிறப்பிலிருந்து இறப்பு வரை எவ்வளவோ நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறே தமிழர்களுடைய வாழ்வில் பல அடையாளங்களோடும் எதிர் பார்ப்புகளோடும் கடந்து சென்று கொண்டிருக்கின்றன.இந்த நேரத்தில் மன்னார் மக்களுடன் நான் உரையாடுவது எனது வரலாற்றில் ஒரு பதிவாகின்றது.என்னுடைய தெரிவுக்கு மன்னார் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கு நன்றியுடன் அத்துடன் உங்களுடன் நம்பிக்கையுடன் பயணிக்க இருக்கிறேன்.

இந்த மண்ணிலே நாம் பல உயிர்களை தியாகம் செய்திருந்தும் நாம் இன்னொரு சுதந்திரமான காற்றை சுவாசிக்க முடியாத கட்டத்தில் இருக்கிறோம். நாம் இன்னும் அந்நியப்படுத்த பட்டிருக்கின்றோம்.

நாம் 75 ஆண்டுகளுக்கு மேலாக போராடி போராடி வரும் ஒரு இனமாக இருக்கின்றோம். 1949 ஆம் ஆண்டு தந்தை செல்வா கூறியது தமிழர் ஒரு தேசிய இனம். இழந்துபோன இறைமையை மீட்டு எடுத்து எமது தேசிய அடையாளத்தோடு வாழ வேண்டும் என செயல்பட ஆரம்பித்தார்.

தந்தை செல்வா மன்னார் மண்ணுக்கும் வந்து சென்றுள்ளார். அவருடைய காலத்தில் பலர் இந்த மண்ணில் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்துள்ளனர்.அவருடைய தேசிய சின்னத்துடன் இந்த மண்ணில் தேசிய மாநாடு இங்கு நடந்துள்ளது.

இவ்வாறு வரலாறு இப்பொழுதும் எமக்கு புதிய பணியை தந்துள்ளது.இது ஒரு தனி மனிதன் ஆற்றும் பணியல்ல. மாறாக நாம் யாவரும் ஒன்றிணைந்து ஒரு சக்தியாக தமிழர் என்று திரள்கின்ற பொழுது இந்த சமூகம் உலகம் எம்மை அங்கீகரிக்கின்ற நாள் நெருங்கிக் கொண்டு இருக்கின்றது என்ற நம்பிக்கை எம்மிடம் இருக்க வேண்டும். எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்குள் உலகம் முழுவதும் பாரிய மாற்றங்கள் இடம்பெற இருக்கின்றன. இன்று உலகத்தில் நிகழ்கின்ற சண்டைகள் அரசியல் நிகழ்வில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கை நாடும் இங்கு ஒரு பிரச்சனையும் இல்லை என்று கண்ணை மூடிக் கொண்டு இருக்கிறார்கள். இலங்கை உலகத்தை ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றது என உலகம் தெளிவாக புரிந்து கொண்டு இருக்கின்றது.

தமிழர்களின் தேசிய அபிலாசைகளை உலகம் புதிய பரிமாணத்துடன் சிந்திக்க முற்பட்டுள்ளது. நாம் இழந்த ஆத்மாக்கள் இப்பொழுது எமக்கு உத்வேகத்தை தருகிறது.நாம் எந்த நோக்கத்துக்காக எமது உறவுகளின் உயிர்களை இழந்தோமோ அந்த நோக்கங்கள் இன்னும் அழிந்து போகவில்லை.சிங்கள மக்களுக்கு முன்பே நமது தமிழினம் இங்கு வாழ்ந்துள்ளது. நாம் இங்கு பல அடையாளங்களுடன் வாழ்ந்திருக்கிறோம்.

ஆகவேதான் இழந்த இறைமையை தான் நாம் மீண்டும் பெற போராடுகின்றோம். எமது மொழி , இடம் , கலை பண்பாட்டு இவைகள் எமது தமிழ் தேசிய அடையாளத்தை பற்றியுள்ளது.நாம் பல சவால்களை சந்தித்து இன்னும் மனிதர்களாக இருக்கிறோம் என்றால் நாம் அறத்தின் மீதும் தர்மத்தின் மீது பற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம்.இலங்கை அரசுக்கு ஒரு செய்தியை கூறுகின்றோம்.

தமிழர்களுக்கு வெளிச்சமான பாதை தொடங்கியுள்ளது. ஆகவே நாம் ஒருமித்த கரங்களாக இணைந்து கொள்வோம்.

நமக்கு இந்த நாடு நிம்மதியான அமைதியை தருமா? என்ற கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்டு நிற்கின்றோம். இலங்கை அரசு தமிழர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்காவிடில் இந்த நாடு பெரும் பாதாளத்துக்குள் விழும் என்பது ஐயம் இல்லை. நாம் பெற்ற துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்க தொடங்கி விட்டனர். இதனால் அரசு பயத்தில் மூழ்கியுள்ளது. இதுவும் தமிழர்களுக்கான பாதை திறக்க வழியாகும். ஆகவே நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம் என இவ்வாறு தெரிவித்தார்.

சென்னை நகரத்திற்கு அருகில் காணி விற்பனைக்கு

சென்னை நகரத்திற்கு அருகில் சிறிய துண்டுக் காணி விற்பனைக்கு உண்டு.

காணி அமைந்திருக்கும் இடம்:
**Santhi Nagar .149 Pallikarani village.Said pet Taluk.**
**Chengai MGR District. St Thomas Mount Panchayat Union.**

மேலதிக விபரங்களுக்கு ஸ்காபுறோவில் வசிக்கும் அதன் உரிமையாளரை அழைக்கவும்:
416 858 4814

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் மக்களின் இருப்பை அழித்தவர் கருணா அவரை தமிழ் மக்கள் நம்பினால் கடவுளாலும் தமிழ் மக்களை காப்பாற்ற முடியாது - கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - MP

(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களின் இருப்பை அழித்ததே வந்து கருணா அவர் தான் பாதுகாக்கப்படபோகின்றார் என்று அவரை தமிழ் மக்கள் நம்பினால் கடவுளாலும் தமிழ் மக்களை காப்பாற்ற முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையியில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி மாவட்ட அமைப்பாளர் உள்ளிட்டவர்களை வெள்ளிக்கிழமை (19) கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிறைச்சாலைக்கு சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மாவீரர் வாரத்தில் கைது செய்யப்பட்ட மிஞ்சிய அரசியல் கைதிகள் மற்றும் சிறையில் இருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் ஜனநாயக போராளி அமைப்பின் நகுலேஸ் ஆகியோரை சந்தித்தேன்

நகுலேஸ் உடைய வழக்கு அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டு அவர்கள் சார்ந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தார் அந்தவகையில் அடுத்து வழக்கு தவனைக்கு முன்னர் பிணையில் விடுவிப்பது தொடர்பாக வெளிப்படுத்தப்படும் அதேவேளை எமது கட்சி மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் தனுஜனை ஆகியோரை கடந்த வாரம் பயங்கரவாத தடுப்பு பிரிவு விசாணை செய்து அதனை அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமாக பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கொண்டுவரமுடியாத விடையங்கள் அந்த பி அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது அந்த சட்டத்தின் கீழே குற்றங்களாக கருதமுடியாத காரணங்களை வைத்து அந்த வழக்குகளை தொடரமுடியாது அவ்வாறான நிலையில் இரண்டு மாதங்களாக சிறைச்சாலையில் அடைத்துவைத்திருப்பது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல்.

அது மட்டுமல்ல சிறிலங்கா அரசினுடைய உண்மையான இனவாத நிகழ்ச்சி நிரலை இரட்டை வேடத்தில் அதாவது நினைவு கூறலாம் என உலகத்திற்கு சொல்லிக் கொண்டு நல்லபிள்ளைக்கு நடித்துக் கொண்டு மறுபக்கம் நினைவு கூறியவர்களை கைது செய்து அவர்களை பழிவாங்கும் கோணத்தில் செயற்படுவதை உலகத்திற் தெரியப்படுத்துவோம் அதேவேளை அரசின் இந்த செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம். இந்த விடையங்களை வருகின்ற மாச்மாதம் இடம்பெறும் மனித உரிமை பேரவையில் அம்பலப்படுத்தி அதனை நேரடியாக பதிவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.



ரணில் விக்கிரமசிங்கவின் கடைசிகனவு தான் மக்களால் தெரிதெடுக்கப்பட்ட ஜனாதிபதியா வேண்டும் என அந்த கனவு சாத்தியமற்றது ஏன் என்றால் இந்தமுறை ஜனாதிபதி தேர்தலில் வாக்குகள் 3 ஆக பிரிவும் அதனால் ரணிலுக்கு வாக்குகள் குறையும் அவர் தனிநபராக ஐக்கிய தேசிய கட்சியினுடைய ஒருவராக இருந்தால் சில வேளை அவருக்கு வாக்குகள் விழும் வாய்ப்புகள் இருந்திருக்கலாம்.

ஆனால் இரண்டரை வருடத்துக்கு முன்னர் சிங்கள மக்கள் விரும்பி வாக்களித்த கோடாவை அதேமக்கள் துரத்தி வீட்டிற்கு அனுப்பியதன் பிறகு அந்த தரப்பை அரசியலில் உயிரோடு வைத்திருப்பதற்கு ரணில் விக்கிரம சிங்க செய்கின்ற இந்த செயற்பாடுகளை தெற்கில் உள்ள மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடையம்.

ரணிலுக்கு இது தெரியும் அவர் தேர்தலில் வெல்வதற்காக தமிழர்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்றவேண்டும் என்ற தேவை இருக்கின்றது இது தான் அவருக்கு இருக்க கூடிய அவசரம் அதனடிப்படையில் ஓடி யாழ்ப்பாணத்துக்கு வந்து அவர்கூறுகின்ற கருத்துக்கள் அடுத்த தேர்தலுக்கு பின்னர் செய்வதாகும் தேர்தலுக்கு முதல் செய்யக் கூடியதை சொல்லமாட்டார் அரசியல் கைதிகள் அவரின் கையொழுத்தில் விடுவிக்கப்படலாம் அதை செய்யமாட்டார்.

எனவே இனி இந்த விளையாட்டுக்களுக்கு தமிழ் மக்கள் விடப்போவதில்லை தமிழ் மக்களை தமிழ் தலைவர்களே ரணில் நல்லவர் அவர் வந்தால் எல்லாம் செய்வார் என ஏமாற்றி வைத்துள்ளனர் ரணில் வந்ததின் பின்னர் அவர் உண்மையான முகத்தை ரணிலே காட்டிவிட்டார்.

கிழக்கில் திருகோணமலை நகரில் வாழுகின்ற 90 வீதமான தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கான திட்டமாக மெகா சிற்றி என்ற திட்டம் இதனை ரணில் விக்கிரமசிங்காவால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது இதனால் திருகோணமலை தமிழருடைய கையில் இருந்து பறிபோயுள்ளது இந்த இரண்டரை வருடத்தில் ரணில் கோட்டாவை விட மிக மோசமாக ஜனநாயத்தை மறுக்கும் வகையில் செயற்பட்டுவருகின்றார் என்றார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிறப்பாக இடம்பெற்ற அமெரிக்க தமிழ்சங்கங்களின் கூட்டமைப்பின் மாநாடு







வட அமெரிக்கத் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் yarl it hub மற்றும் யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து நடாத்திய FiTEN Yarl 2024 மாநாடு வெள்ளிக்கிழமை (19.01.2024) காலை 09.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றது.

எமது பிரதேசத்தில் வளர்ந்து வரும் தொழில் முனைவோரை வலுப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை வளர்த்தல் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

இம்மாநாட்டில் வட அமெரிக்க தமிழ்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவரான பாலா சுவாமிநாதன், முன்னாள் தலைவரான கால்டுவெல் வேல்நம்பி, fiten அமைப்பின் தலைவரான கௌதம் ராஜன், ஒருங்கிணைப்பாளர்களான ஷான் நந்தகுமார், பார்த்தீபன் பரஞ்சோதி மற்றும் yarl it hub இன் ஒருங்கிணைப்பாளரான சயந்தன், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீ சற்குணராஜா மற்றும் UBL இயக்குனரான ஈஸ்வரமோகன், அமெரிக்க தொழிலதிபரான ராஜ் ராஜரத்தினம் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.




உள்ளூர் உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு அமெரிக்கா, கனடா மற்றும் இந்தியாவின் தமிழ்நாட்டில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தல், பல வெற்றிபெற்ற தொழில் வல்லுனர்களின் தொழில் அனுபவ மற்றும் அறிவுப் பகிர்வுகள் என்பவற்றுடன் உள்ளூர் தொழில் முனைவோருக்கும், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தொழில் முனைவோருக்கும், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தொழில் முனைவோருக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் வகையில் இம்மாநாடு இடம்பெற்றமை சிறப்பம்சமாகும்.



# யாழ்ப்பாண நகரில் கடைகள், சொத்துக்களை எரிக்க பெல்ஜியத்திலிருந்து 12 லட்சம் ரூபா "ஒப்பந்தம்" — மூவர் கைது!

யாழ்ப்பாண நகர்ப்பகுதியிலுள்ள பிரபல்யமான ஆடை விற்பனை நிலையங்கள், கார், மற்றும் வீடுகளை எரித்த குற்றச்சாட்டில், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பதில் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள இரண்டு கடைகள் அண்மையில் எரிக்கப்பட்டன. 2 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் இதன்போது எரிந்தழிந்தன. அத்துடன் கார் ஒன்றும் எரிக்கப்பட்டது. இதைவிட மோட்டார்சைக்கிள் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. இவை தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ ஈரிடம் முறையிடப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் நேற்று மூன்று பிரதான சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு மோட்டார்சைக்கிள்கள், ஒரு வாள் என்பன மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேகநபர் ஒருவரின் பெல்ஜியம் வாழ் பெரியம்மாவின் நட்பு வட்டாரத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே இந்த வி'மச் செயலில் அவர்கள் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடைகளை எரிப்பதற்காக 12 லட்சம் ரூபா பணமும், வாகனங்களை எரிப்பதற்காக 7 லட்சம் ரூபா பணமும் பெல்ஜியத்தின் இருக்கும் நபரிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுவதற்கு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஒன்றரை லட்சம் ரூபா பணமும் அவர்களுடைய வங்கிக் கணக்குக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து குற்றச்செயல்களின் சூத்திரதாரியான பெல்ஜியம் வாழ் நபரை இன்டர்போலின் உதவியுடன் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரானார் சி.சிறீதரன்



(21-01-2024)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்களின் அதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் தேர்வு செய்யும் பொதுச்சபைக் கூட்டம் 21-01-2023 அன்று திருகோணமலையில் இடம்பெற்றது.

இந்நிலையில் 184 வாக்குகளைப் பெற்று சிறீதரன் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்த்துப் போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் 137 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

கட்சியின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ. சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சிரேஸ்ட தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், பொதுச் சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழரசுக் கட்சி வரலாற்றில் முதந்தடவையாக தலைவர் தேர்வு மூவருக்கிடையிலான போட்டியாக அமைவதால் இன்றைய கூட்டம் முக்கியம் வாய்ந்ததாக தமிழ் அரசியல் தரப்பில் அனைவர் மத்தியிலும் பார்க்கப்பட்டது.

அந்த அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி. சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் ஆகியோர் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டனர்.

இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் சக போட்டியாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனுக்கு தனது ஆதரவை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து தலைவர் தெரிவுக்கான வாக்களிப்பு நடத்துவதற்கு பதில் செயலாளர் பா. சத்தியலிங்கத்தினால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, இரகசிய வாக்களிப்பு இடம்பெற்றது.

இந்நிலையில், 184 வாக்குகளைப் பெற்று சிறீதரன் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்த்துப் போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் 137 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

தமிழரசுக் கட்சி வரலாற்றில் தலைவர் ஒருவர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றமை இதுவே முதந்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

## Canada to Stabilize Growth and Decrease Number of New International Student Permits Issued to Approximately 360,000 for 2024

# கனடா 2024ல் சுமார் 360,000 புதிய சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி எண்ணிக்கையைக் குறைக்க கனடிய குடிவரவு, மற்றும் குடியுரிமை அமைச்சர் நடவடிக்கை



"கனடாவிற்கு முறையான அனுமதி பெற்று வருகின்ற சர்வதேச மாணவர்கள் எங்கள் கனடாவில் உள்ள சமூகங்களை நன்கு வளப்படுத்துகிறார்கள் மற்றும் கனடாவின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார கட்டமைப்பில் முக்கியமான பங்கு வகிப்பவர்களாகவும் உள்ளனர். கடந்த சில ஆண்டுகளில், சர்வதேச மாணவர்களின் வருகை கனடாவின் ஒருமைப்பாடு மற்றும் கட்டுப்பாடு போன்றவைகளுக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. சில நிறுவனங்கள் வருவாயை ஈட்ட மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதிலேயே கவனமாக உள்ளார்கள். இதனால் முறைகேடுகள் கணிசமாக அதிகரித்துள்ளன, மேலும் அதிகமான மாணவர்கள் வெற்றிபெறத் தேவையான சரியான ஆதரவின்றி கனடாவிற்கு வருகிறார்கள். கனடாவிற்கு வரும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையில் விரைவான அதிகரிப்பதால் வீட்டுவசதி, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் பிற சேவைகளில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. சர்வதேச மாணவர்களை மோசமான நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகள் ஆகிவற்றிலிருந்து பாதுகாப்பதற்கும், கனடாவில் நிலையான மக்கள்தொகை வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் நாங்கள் பணியாற்றுவதால், கனடாவில் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுடன் அரசாங்கம் புதிய அணுகு முறைகளை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது".

இவ்வாறு கனடிய குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் கௌரவ மார்க் மில்லர் 22-01-2024 திங்கட்கிழமையன்று ஒட்டாவா நகரில் அறிவித்தார்.

அவர் இந்த அவசரமான விடயமாக தொடர்ந்து தெரிவிக்கையில் "இரண்டு வருட காலத்திற்கு புதிய வளர்ச்சியை நிலைநிறுத்துவதற்காக சர்வதேச மாணவர் அனுமதி விண்ணப்பங்களின் மீதான உட்கொள்ளும் வரம்பை கனடா அரசாங்கம் அமைக்கும். 2024 ஆம் ஆண்டில், தொப்பி தோராயமாக 360,000 அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு அனுமதிகளை விளைவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, 2023 இல் இருந்து 35% குறையும். நேர்மையின் உணர்வில், தனிநபர் மாகாண மற்றும் பிராந்திய தொப்பிகள் நிறுவப்பட்டுள்ளன, மக்கள்தொகையின் எடையைக் கொண்டு, இது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். சர்வதேச மாணவர் எண்ணிக்கை மிகவும் நீடித்த வளர்ச்சியைக் கண்ட மாகாணங்களில் குறைகிறது. படிப்பு அனுமதி புதுப்பித்தல் பாதிக்கப்படாது. முதுகலை மற்றும் முனைவர் பட்டங்கள் மற்றும் தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியைத் தொடர்பவர்கள் கவலைப்படத் தேவையில்லை. தற்போதைய கல்வி அனுமதி வைத்திருப்பவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

எமது அமைச்சானது ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிரதேசத்திற்கும் மாணவர்களின் தொகையின் ஒரு பகுதியை ஒதுக்கும், பின்னர் அவர்கள் ஒதுக்கப்பட்ட கற்றல் நிறுவனங்களிடையே ஒதுக்கீட்டை விநியோகிப்பார்கள். ஜனவரி 22, 2024 வரை இந்த வரம்பை நடைமுறைப்படுத்த, IRCC க்கு சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு




ஆய்வு அனுமதி விண்ணப்பத்திற்கும் ஒரு மாகாணம் அல்லது பிரதேசத்தின் சான்றளிப்பு கடிதமும் தேவைப்படும். மார்ச் 31, 2024க்குள் மாணவர்களுக்கு சான்றளிப்பு கடிதங்களை வழங்குவதற்கான செயல்முறையை மாகாணங்களும் பிரதேசங்களும் நிறுவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தற்காலிக நடவடிக்கைகள் இரண்டு ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும், மேலும் 2025 இல் ஏற்றுக்கொள்ளப்படும் புதிய படிப்பு அனுமதி விண்ணப்பங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதியில் மறுமதிப்பீடு செய்யப்படும். இந்த காலகட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பை இறுதி செய்தல், சர்வதேச மாணவர்களின் நீண்டகால நிலையான நிலைகளை தீர்மானித்தல் உட்பட, சர்வதேச மாணவர்களுக்கான நிலையான பாதையை மேம்படுத்துவதில், மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள், நியமிக்கப்பட்ட கற்றல் நிறுவனங்கள் மற்றும் தேசிய கல்வி பங்குதாரர்களுடன் கனடா அரசாங்கம் தொடர்ந்து பணியாற்றும்.

- செப்டம்பர் 1, 2024 முதல், பாடத்திட்ட உரிம ஏற்பாட்டின் ஒரு பகுதியான படிப்புத் திட்டத்தைத் தொடங்கும் சர்வதேச மாணவர்கள், பட்டப்படிப்பு முடித்தவுடன் முதுகலை பணி அனுமதிக்கு தகுதி பெற மாட்டார்கள். பாடத்திட்ட உரிம ஒப்பந்தங்களின் கீழ், மாணவர்கள் தொடர்புடைய பொதுக் கல்லூரியின் பாடத்திட்டத்தை வழங்க உரிமம் பெற்ற ஒரு தனியார் கல்லூரியில் உடல்ரீதியாகப் படிக்கின்றனர். இந்த திட்டங்கள் சமீபத்திய ஆண்டுகளில் சர்வதேச மாணவர்களை ஈர்ப்பதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளன, இருப்பினும் அவர்கள் பொதுக் கல்லூரிகளைக் காட்டிலும் குறைவான கண்காணிப்பைக் கொண்டுள்ளனர் மற்றும் முதுகலை பட்டப்படிப்பு பணி அனுமதித் தகுதியைப் பொறுத்தவரை அவை ஒரு ஓட்டையாக செயல்படுகின்றன.

- முதுகலை மற்றும் பிற குறுகிய பட்டதாரி-நிலை திட்டங்களின் பட்டதாரிகள் விரைவில் 3 ஆண்டு பணி அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவார்கள். தற்போதைய அளவுகோல்களின் கீழ், முதுகலை பணி அனுமதியின் காலப்பகுதி ஒரு தனிநபரின் படிப்புத் திட்டத்தின் காலப்பகுதியை வதிவிடத்திற்கு மாறக்கூடிய நேரத்தைக் கட்டுப்படுத்துகிறது.

அடுத்தடுத்த வாரங்களில், முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளில் சர்வதேச மாணவர்களின் வாழ்க்கைத் துணைவர்களுக்கு மட்டுமே கனடாவில் வேலை செய்யும் அனுமதி கிடைக்கும். இளங்கலை மற்றும் கல்லூரி திட்டங்கள் உட்பட, மற்ற படிப்புகளில் உள்ள சர்வதேச மாணவர்களின் வாழ்க்கைத் துணைவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்பட மாட்டாது.

22-01-2024 திங்கட்கிழமையன்று அறிவிக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கைகள் சர்வதேச மாணவர் திட்டத்தில் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட பிற சீர்திருத்தங்களை நிறைவு செய்கின்றன. ஒன்றாக எடுத்துக்கொண்டால், உண்மையான மாணவர்கள் தங்களுக்குத் தேவையான ஆதரவைப் பெறுவதையும், கனடாவில் செழுமைப்படுத்தும் படிப்பு அனுபவத்திற்குத் தேவையான ஆதாரங்களையும் பெறுவதையும் உறுதிசெய்வதையும், அதே நேரத்தில் வீடு, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் பிறவற்றில் வரும் மாணவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையை நிலைப்படுத்துவதும் மற்றும் அழுத்தங்களைக் குறைப்பதும் எமது அமைச்சின் நோக்கமாகும்" என்றும் அமைச்சர் அறிவித்துள்ளார்.



## உடனடி யுத்த நிறுத்தம்! இஸ்ரேல் — பலஸ்தீன முரண்பாட்டுக்கு இரு தேசத் தீர்வு

### - நாடுகடந்த தமிழீழ அரசாங்க அரசவைத் தீர்மானம்!!!

உலக செய்திகள் World News

தற்போதைய இஸ்ரேல் - பலஸ்தீனப் போர் தொடர்பான உடனடியான மற்றும் நிரந்தரமானதொரு யுத்த நிறுத்தத்தைக் கோரும் தீர்மானமொன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை நிறைவேற்றியது.

இம்மாதம் ஆறாம் திகதி நிறைவேற்றப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தீர்மானமானது பரவலாக அங்கிகரிக்கப்பட்ட, நீண்ட காலமான, சர்வதேச அங்கிகாரம் பெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன முரண்பாட்டுக்கான இரண்டு தேசத் தீர்வானது அமுல்படுத்தப்பட வேண்டுமென்று கோருவதுடன், அதற்கு இந்த முடிவில் மேற்குக் கரையையும், காஸாவையும் உள்ளடக்கிய பலஸ்தீன தேசமொன்றின் உருவாக்கமே ஆரம்பப் புள்ளியாக இருக்கும்.

மேலும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தீர்மானமானது (1-2024) தற்போதைய ஆயுதப் போராட்டம் காரணமாக இழந்துவரும் உயிர்களையும், சொத்துக்களையும் காப்பாற்றுவதற்கும், இரு தேசத் தீர்வு உருவாக்கப்படும் வரையில் அமைதியை ஏற்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படைகள் இரண்டு பகுதிகளிலும் தேவை என வலியுறுத்துவதாகவும் கூறுகிறது.

ருவாண்டா, சிறீலங்கா ஆயுத மோதல்களில் தான் விட்ட தவறுகளிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை பாடம் கற்காமல் இருப்பது குறித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கவலை தெரிவிப்பதாகவும், தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்ட இரண்டு நிகழ்வுகளில் பாதுகாக்கும் பொறுப்பை (R2P) ஐக்கிய நாடுகள் சபை அமுல் நடத்த தவறியதால், ஆயிரக்கணக்கான அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டிருந்தமையையும் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இரண்டு தேசத் தீர்மானத்தை அமுல் நடத்துவதன் மூலம் போர் பிராந்தியத்தில் மேலும் தீவிரமடைந்து வரும் இரத்தக்களரியைத் தடுக்கலாம் எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தீர்மானமானது வலியுறுத்துகிறது.

இஸ்ரேலிய - பலஸ்தீனப் பிரச்சனை, தமிழ் - சிறீலங்காப் பிரச்சனை, உக்ரேன் - ரஷ்யா பிரச்சனை, நாகொர்னோ - கரபாஹ் பிரச்சனை உள்ளிட்டவையானது அமைதி மற்றும் நீதிக்கு புதிய பொறிமுறைகள் தேவை என்பதை வெளிப்படுத்துகிறது. இதே கருத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) முதலாவது வழக்குத்தொடுநர் மொரெனோ ஒக்கம்போ (Mr. Moreno Ocampo.) வலியுறுத்தி உள்ளார். பிரச்சனைகளை முடிவிற்கு கொண்டு வருவதற்கு புதிய பொறிமுறைகளை நாம் உருவாக்க வேண்டும் என அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

புதிய பொறிமுறைகளை உருவாக்குவதை கருத்திற் கொண்டு பாதிக்கப்பட்டவர்களால் முன்னெடுக்கப்படும் சர்வதேச நீதி செயற்பாட்டொன்றை (VDIJ) நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. இவ்விடயம் தொடர்பாக உலகளாவிய ரீதியில் முன்னணியொன்றை அமைப்பதற்கான நகர்வில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது. இம் முயற்சியில் ஆர்வம் உள்ளவர்களை இணையுமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## கன்னியாகுமரி மாவட்டம் குமரியில் மெக்கானிக் அடித்துக் கொலை

### 2 பங்கு தந்தைகள் உள்பட 15 பேர் மீது வழக்கு



கன்னியாகுமரி மாவட்டம் திங்கள்சந்தை அருகே உள்ள மைலோடு மடத்துவிளை பகுதியை சேர்ந்தவர் சேவியர் குமார் (வயது 45). இவர் கன்னியாகுமரி அரசு போக்குவரத்து கழக பணிமனையில் மெக்கானிக்காக வேலை பார்த்து வந்தார். நாம் தமிழர் கட்சியின் தக்கலை ஒன்றிய தலைவராகவும் இருந்தார். இவருடைய மனைவி ஜெமினி (40). இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். ஜெமினி மைலோடு தேவாலயத்துக்குட்பட்ட பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வந்தார்.

மைலோடு தேவாலயத்தின் உறுப்பினர் என்ற முறையில் சேவியர் குமார் வரவு செலவுகள் தொடர்பான கணக்குகள் கேட்பது வழக்கமாக இருந்துள்ளது. அவ்வப்போது இந்த பிரச்சனை குறித்து நிர்வாகம் தொடர்பாக வாட்ஸ் அப், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களிலும் கேள்வி கேட்டு பதிவுகளை வெளியிட்டு வந்துள்ளார். இதனால் ஆலய நிர்வாகம் மற்றும் பள்ளி நிர்வாகம் சேவியர் குமாரின் மனைவி ஜெமினியை சஸ்பெண்ட் செய்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த சேவியர் குமார் மைலோடு ஆலய வளாகத்தில் உள்ள பங்குத் தந்தை இல்லத்திற்கு 20ம் தேதி மதியம் 2.30 மணியளவில் சென்றார். அங்கு தந்தை ராபின்சன் உள்ளிட்டோர் இருந்ததாக கூறப்படுகிறது. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த போது தகராறு ஏற்பட்டுள்ளது.

இதில் ஆத்திரம் அடைந்தவர்கள் சேவியர் குமாரை சரமாரியாக தாக்கி உள்ளனர். அங்கிருந்த நாற்காலி, அயர்ன் பாக்ஸ், பாத்திரங்கள் உள்ளிட்டவற்றை எடுத்து தலை, வயிறு, மார்பு, முகம் பகுதியில் சரமாரியாக தாக்கினர். இதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் சேவியர்குமார் உயிரிழந்தார். இதனையடுத்து அங்கிருந்தவர்கள் தப்பி சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் அறிந்ததும் சேவியர் குமாரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நாம் தமிழர் கட்சியை சேர்ந்தவர்கள் பங்குத்தந்த இல்லத்தில் குவிந்தனர். இது குறித்து அறிந்ததும் குளச்சல் ஏ.எஸ்.பி - பிரவீன் கவுதம், தக்கலை டி.எஸ்.பி - உதயசூரியன், மற்றும் இரணியல் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்றனர் அதிரடிப்படை போலீசாரும் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட கொலையாளிகளை கைது செய்யும் வரை உடலை எடுக்க விடமாட்டோம் என கூறி போராட்டம் நடந்தது.

இதையடுத்து கன்னியாகுமரி மாவட்ட எஸ்.பி. (பொறுப்பு) சிலம்பரசன் சம்பவ இடத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினார். நள்ளிரவு வரை பேச்சுவார்த்தை நடைபெற்றது. 21ம் தேதி அதிகாலை 2 மணியளவில் சேவியர் குமார் உடலை எடுத்து செல்ல உறவினர்கள் சம்மதம் தெரிவித்தனர். இதையடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. நேற்று உடல் பிரேத பரிசோதனை நடந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக தற்போது கொலை செய்யப்பட்ட சேவியர் குமாரின் மனைவி ஜெமினி அளித்த புகாரின் அடிப்படையில் வழக்கறிஞர் ரமேஷ் பாபு (46), பங்குதந்தை ராபின்சன் (39), ஜஸ்டஸ் ரோக் (58), சுரேஷ் (48), எட்வின் ஜோஸ் (40), அஜய் (36), ஆர்வின் (36), டெரிக் (24), வினோ (44), வின்சென்ட் (60), ஜெலிஸ் (40) பங்குத்தந்தை பெனிட்டா மற்றும் கண்டால் தெரியும் 2 பேர் உட்பட 15 பேர் மீது கொலை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பான மேல் விசாரணைக்காக ஏ.எஸ்.பி - பிரவீன் கவுதம் மேற்பார்வையில், தக்கலை டி.எஸ்.பி - உதயசூரியன், இரணியல் போலீஸ் இன்ஸ்பெக்டர் - செந்தில்வேல் குமார், மணவாளக்குறிச்சி போலீஸ் இன்ஸ்பெக்டர் - பெருமாள், தக்கலை போலீஸ் இன்ஸ்பெக்டர் - ராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் 5 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகிறார்கள். சம்பவ இடத்துக்கு தடவியில் நிபுணர்களும் வந்து ஆய்வு செய்தனர். உடைந்து கிடந்த பொருட்களில் இருந்தும், அங்கிருந்த மேஜை, நாற்காலிகள், பாத்திரங்கள் உள்ளிட்டவற்றிலிருந்தும் கை ரேகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சம்பவம் நடந்த அறையில் கண்காணிப்பு கேமராக்களும் உண்டு. அந்த கேமராக்களையும் போலீசார் கைப்பற்றி உள்ளனர். அதில் உள்ள ரிசீவர் மாயமாகி உள்ளதாக கூறப்படுகிறது. அது பற்றி விசாரணை நடத்தி வருகிறார்கள். தொடர்ந்து அந்த பகுதியில் அதிரடிப்படை போலீசார் குவிக்கப் பட்டுள்ளனர்.

## ஜோர்டானில் சிக்கிய தொழிலாளர்களை மீட்கும் "வல்லமை" இலங்கைக்கு இல்லை

ஜோர்டான் நாட்டில் தொழிற்சாலை ஒன்று மூடப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகியும் அங்கு பணியாற்றிய நூற்றுக்கணக்கான இலங்கைப் பெண்கள் அங்குள்ள இலங்கைத் தூதரகம் அவர்கள் தங்குவதற்கு மாற்று ஏற்பாடுகளோ அல்லது நாடு திரும்பவோ உதவும் வல்லமை இல்லாததாதால் அங்கு சிக்கி தவிக்கின்றனர்.

இந்திய மற்றும் வங்கதேசத்தின் தொழிலாளர்களுடன் இணைந்து இந்த இலங்கைத் தொழிலாளர்கள் ஜோர்டானின் தொழிற்துறையிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அதேவேளை இலங்கையர்களைத் தவிர இதர நாட்டவர் தமது தூ தரகங்கள் மூலம் தங்குமிட ஏற்பாடுகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

"அனைத்து தொழிலாளர்களும் அவதிப்படுகின்றனர், எனினும் தமது நாட்டைச் சேர்ந்த பணியாளர்களை மீட்டு அவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் வல்லமை ஜோர்டானிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு இல்லை என்று நாங்கள் நம்புகிறோம்" என ஜோர்டானின் முன்னணி மனித உரிமைகள் அமைப்பு ஒன்று கூறுகிறது.

"ஜோர்டானில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்களிடமிருந்து எமக்கு முறைப்பாடுகள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது" என்று தலைநகர் அம்மானிலுள்ள தம்கீன் எனும் அமைப்பின் சட்டத்தரணி ஒருவர் கூறுகிறார். அந்த அமைப்பு ஜோர்டானில் பணியாற்றும் தொழிலாளர்கள், புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகளின் உரிமைகள் மற்றும் தொழிற்சங்கங்களை ஆதரிக்கிறது.

அந்த தொழிற்சாலையின் உரிமையாளர் நாட்டைவிட்டு ஓடியதால் ஊழியர்கள் ஊதியம் கிடைக்காமல் சிரமப்படுகின்றனர். இதே நெருக்கடியை இந்திய மற்றும் வங்கதேச ஊழியர்கள் எதிர்கொண்டாலும், அவர்கள் தமது பிரச்சனைகளை வெளிப்படுத்தும் நம்பிக்கையுடன் அந்த தன்னார்வ அமைப்பை தொடர்புகொள்ள முடிவெடுத்தனர்.

ஜோர்டனின் ஷபாபி பகுதியில் செயற்பட்ட மூன்று ஆடைத் தொழிற்சாலைகளில் பணியற்றிய குறைந்தபட்சம் 350 இலங்கைத் தொழிலாளர்கள் அவை மூடப்பட்ட நிலையில் அங்கு சிக்கியுள்ளனர். அவர்கள் பணியாற்றிய அசீல் யுனிவர்செல் கார்மெண்ட்ஸ் நிறுவனம் வங்குரோத்து அறிவித்துவிட்டது, மேலும் தம்து உரிமையாளர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாகவும் கூறுகிறது. இதன் காரணமாக ஊதியம் கிட்டாத தொழிலாளர்கள் நாடு திரும்ப முடியாமல் நெருக்கடியில் சிக்கியுள்ளனர்.

அங்கு வேலையிழந்த பெண்கள் விடுதிகள் மற்றும் அந்த நிறுவனத்தின் தங்குமிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எனினும், அங்கு சமூக ஊடகத் தகவல்களின் அடிப்படையில் அங்கு எவ்விதமான அடிப்படை வசதிகளும் இல்லை.

"வெளிநாடு வாழ் கதாநாயகர்கள்" கைவிடப்பட்டனர்.

"இலங்கைக்கு எமது டொலர்கள் மட்டுமே வேண்டுமா?" என்று இலங்கைத் தூதரகத்திற்கு வெளியே கோபமாக கேட்கிறார் ஒரு பெண்.

"எனக்கு போதுமான உணவில்லை, எனக்கு குடிநீர் இல்லை, கடந்த மாதம் நான் நோய்வாய்ப்பட்டேன். எனது வேதனைகளை எடுத்துக்கூற யார் இருக்கிறார்கள்?" என்று அவர் மேலும் கேள்வி எழுப்புகிறார். "அனைத்து வேலைகளும் செய்த பிறகு எம்மை இங்கிருந்து வெளியேற்றினால், எங்களை யார் கவனித்துக்கொள்வார்கள்? இந்த நாட்டில் நாங்கள் நிராதரவாக விடப்பட்டுள்ளோம். இங்கிருக்கும் தூதரம் என்ன செய்கிறது? தூதரகத்தில் இருப்பவர்கள் சும்மா வந்து சென்று போகிறார்கள். எவ்வித உதவியும் இல்லை."

கண்ணீருடன் உருக்கமான ஒரு வேண்டுகோள் ஒன்றையும் அவர் விடுத்துள்ளார். "நான்கு மாதங்களாக ஊதியம் நிலுவையில் உள்ளது, ஏழு மாதங்கள் சமூகப் பாதுகாப்பு கிடைக்கவில்லை. நாங்கள் எமது உரிமைகளை மட்டுமே கேட்கிறோம். எங்களைப் பெயரள்விற்கு மட்டுமே "வெளிநாடு வாழ் கதாநாயகர்கள்" என்று கூறுகிறார்களா? அந்த தொழிற்சாலை ஒரு மாதமாக மூடியுள்ளது".

அங்கு சிக்கியுள்ள பிரஜைகளை நாட்டிற்கு கொண்டுவரும் திட்டங்கள் எதையும் இலங்கை அரசு இறுதி செய்யவில்லை.

"இலங்கையர்களைப் பொறுத்தவரை, அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் போன்ற உள்ளூர் முகவர்களிடம் பதிவு செய்த பிறகே ஜோர்டான் சென்றனர். சில அங்கு சுற்றுலா விசாவில் சென்று வேலை பார்க்கின்றனர். முதலாவது பிரிவினர் தொடர்பில் எம்மால் பொதுவான வழிமுறைகளின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும், ஆனால் இரண்டாவது பிரிவினரைப் பொறுத்தவரையில் சிறப்பு முடிவு ஒன்று எடுக்கப்பட வேண்டும்" என்று கொழும்பில் செய்தியாளர்களிடன் பேசும்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பிற்கு பொறுப்பான ராஜாங்க அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார தெரித்தார்.

தாங்கள் ஏற்கெனவே ஜோர்டானிய தொழிற்துறை அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அமைச்சர் கூறுகிறார்.

"ஒரு தொழிற்சாலை மூடப்படும் போது, தொழிலாளர்களுக்கு இழப்பீடு அளிக்கப்பட வேண்டும். அங்கிருக்கும் உரிய அதிகாரி இது தொடர்பில் தொழிற்சாலையிடம் முறைப்பாடு செய்துள்ளார் எனவே, உரிய இழப்பீடுகள் வழங்கப்பட்ட பிறகு உரிய வழிமுறைகளை கடைபிடித்து சில இலங்கையர்கள் நாடு திரும்பவுள்ளனர்".

ஆனால் அங்கு சிக்கியுள்ள 350 பணியாளர்களின் நிலைமை மேலும் மோசமடைவதற்கு முன்னதாக, இந்த "உரிய வழிமுறைகளை" வகுத்து, காத்திரமான நடவடிக்கை திட்டம் ஒன்றை எடுக்க அரசுக்கு எவ்வளவு காலமாகும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறிதரன் கிளிநொச்சி துயிலுமில்லத்தில் அஞ்சலி!



தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் விசேட வழிபாடு இடம்பெற்றதை தொடர்ந்து வரவேற்பு இடம்பெற்றது.

திருகோணமலையிலிருந்து தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு கிளிநொச்சி திரும்பிய சிறிதரன் எம்பி குழுவினரை நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களும் அபிமானிகளும் வரவேற்றனர்





# றமேஸ் அடிகளாருக்கு இலங்கை அரசின் உயர் நிலை விருது வழங்கி கௌரவம்!



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு கிராமத்தின் மைந்தன் அருட்தந்தை றமேஸ் (சதீஸ்குமார்) அமதி அடிகளாருக்கு கடந்த 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பு பண்டாரநாயகா சர்வதேச மாநாடு மண்டபத்தில் இடம் பெற்ற சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் (IHRM) ஏற்பாட்டில் இலங்கை அரசின் உயர்நிலை அதிகாரிகள், சமூக, மனிதநேயப் பணியாளர்கள் மற்றும் அறங்காவலர் சபையினர், மதகுருக்கள் முன்னிலையில் தேசபந்து எனும் மனிதாபிமானம் மிக்கவர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அருட்தந்தையின் சமூகத் தன்னார்வ தொண்டுப் பணிக்காகவும், நாட்டில் மனித நேயத்தையும், மனித மாண்பையும், பாதுகாத்து மேம்படுத்தும் செயல் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமைக்காகவே இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

சமூக நீதியை நிலைநாட்டவும், மனித தர்மத்தைக் காக்கவும் ஆற்றிவரும் பணிக்காக இலங்கை அரசினால் வழங்கப்படும் உயர் விருதான "*தேசபந்து மனிதாபிமானம் மிக்கவர்*" விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டதோடு இந் நிகழ்வில் அவர் சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு நீதி, மற்றும் சிறைச்சாலை விவகாரம், யாப்பு சீர்திருத்தங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் யாழ்ப்பாண மாவட்ட சக வாழ்வு அமைப்பின் ஆலோசனை குழு அங்கத்தவர்களில் ஒருவராகவும், அருட்தந்தை றமேஸ் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.



றமேஷ் அடிகளாரை அண்மையில் அவரது சொந்த ஊரான கட்டைக்காட்டு கிராமத்தில் இடம்பெற்ற மாபெரும் பட்டத்திருவிழாவிற்கு அழைத்து அம்மக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மகா கும்பாபிஷேக விழாவிற்கு கங்காதரணி தீர்த்தக் கேணியில் நீர் எடுக்கும் நிகழ்வு



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மகா கும்பாபிஷேக பெருவிழாவிற்கான பிரதிஷ்டா பூர்வாங்க கிரியைகள் 17.01.2024 அன்று பக்தி பூர்வமாக ஆரம்பமாகியதை தொடர்ந்து 18,19 ஆகிய தினங்களில் விஷேட, யாக, அபிஷேகங்கள் இடம்பெற்று, கும்பாபிஷேகத்திற்கான ஆலயத்தில் வைத்து செய்யப்பட்ட திருக்குடம் எடுத்துவரப்பட்டு திருக்குடமுழுக்கிற்காக பிரதான கும்பநீரானது கங்காதரணி தீர்த்தக் கேணியில் இருந்து எடுக்குவரும் சமய நிகழ்வு பக்திபூர்வமாக எடுத்துவரப்பட்டது.

புனராவர்த்தன அஷ்டபந்தன ஸ்வரண பந்தன உத்த மோத்தம த்ரயத்திரும்சமத் குண்டபக்ஷ மஹாயாக பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24.01.2024 அன்று காலை 09.38 முதல் 11.20 மணிமுதல் 33 குண்ட பக்ஷ மஹாயாக பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நிகழவுள்ளது.



21.01.2024 அன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மனுக்கு உரிய தூபதீபம், யந்திர ஸ்தாபனங்கள், பரிவார மூர்த்திகள், பிரம்ஸ்தாபனம், அர்த்தபந்தண சாத்தல் இடம்பெற்று மறுநாள் 22.01.2024 அன்று காலை 07.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவாள்ள எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு மறுநாள் 23.01.2024 மாலை 05.00 வரை இடம் பெற்று இனிதே நிறைவடையும்.


# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 M | 45 F | 50 M | 50 F | 55 M | 55 F | 60 M | 60 F | 65 M | 65 F |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 M | 45 F | 50 M | 50 F | 55 M | 55 F | 60 M | 60 F | 65 M | 65 F |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4



# தமிழரசுக் கட்சிக்கு முன்னுள்ள சவால்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

தமிழரசு கட்சியின் தலைவருக்கான தேர்தல் ஏதோ பெரிய ஜனாதிபதித் தேர்தல் போல களைகட்டியது. ஒரு கட்சியின் தலைவர் யார் என்பதற்கான தேர்தலுக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது? ஏனென்றால் தமிழ அரசியல் அந்தளவுக்கு கட்சி மைய அரசியலாக மாறிவிட்டது என்று பொருள். சிறீதரன் ஒரு மக்கள் இயக்கத்தைப் பற்றிப் பேசியிருந்தாலும்கூட தமிழ் மக்களின் அரசியலானது கட்சிகளுக்குள் தேங்கி விட்டது என்பதைத்தான் அது காட்டுகின்றது. உள்ளதில் பெரிய கட்சியின் தலைவர் யார் என்பது தமிழ் அரசியலில் எதிர்காலப் போக்கை தீர்மானிக்கும் என்ற எதிர்பார்ப்புக் காரணமாகத் தான் தமிழரசு கட்சிக்குள் நடந்த தேர்தல் அத்துணை முக்கியத்துவம் பெற்றது.

இத்தனைக்கும் தமிழரசு கட்சி தொடங்கி 73 ஆண்டுகளாகின்றன. அந்தக் கட்சியின் ஆங்கில பெயர் பெடரல் பாட்டி. அதாவது சமஷ்டிக் கட்சி. கடந்த 73 ஆண்டுகளாக அக்கட்சியால் தனது பெயரில் ஒட்டிக் கொண்டிருக்கும் சமஸ்டியை ஏன் அடைய முடியவில்லை? அப்படி என்றால் அக்கட்சி அதன் இலட்சிய வாசகத்திலேயே கடந்த 73 ஆண்டுகளாக வெற்றி பெறவில்லை என்று பொருள். இந்நிலையில் ஒரு புதிய தலைவர் இந்த ஆண்டிலிருந்து அதை வெற்றிப் பாதையில் செலுத்துவார் என்று நம்பலாமா?

சிறீதரனின் வெற்றி கொள்கை வெற்றியாக வியாக்கியானம் செய்யப்படுகின்றது. அப்படியென்றால் சுமந்திரனுக்கு வாக்களித்தவர்கள் கொள்கை அற்றவர்களா? அல்லது கட்சிக்குள் பொதுச்சபை உறுப்பினர்களில் கிட்டத்தட்ட 137 பேர் தமிழ்த் தேசியக் கொள்கைக்கு மாறானவர்களா?

அது பொதுமக்கள் வாக்களித்த ஒரு தேர்தல் அல்ல. கட்சி உறுப்பினர்கள் வாக்களித்த ஒரு தேர்தல். அதாவது அரசியல்வாதிகள் வாக்களித்த ஒரு தேர்தல். அந்த அரசியல்வாதிகள் கொள்கையால் வார்த்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுவது பொருத்தமானதா? அப்படி என்றால் கடந்த 15 ஆண்டுகளாக கட்சி சீரழிந்த பொழுது இந்த கொள்கை வாதிகள் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்? அவர்களால் ஏன் தலை எடுக்க முடியவில்லை? அது மட்டுமல்ல அந்தக் கொள்கைவாதிகளுக்கு தலைமை தாங்கும் சிறீதரன் கடந்த பொதுத் தேர்தலின் போது கொள்கைக்கு எதிரான சுதந்திரனோடு கூட்டுச் சேர்ந்திருந்தாரே? அப்பொழுது கொள்கை எங்கே போனது?

எனவே இதை ஒரு கொள்கை வெற்றியாகக் காட்ட முடியாது. அது மட்டுமல்ல, இதில் வாக்களித்த அரசியல்வாதிகள் எல்லாரையும் கொள்கைவாதிகள் என்றும் எடுத்துக் கொள்ள முடியாது. தமிழரசுக் கட்சிக்குள் உண்மையான நேர்மையான ஆட்கள் உண்டு. அவர்களை இக்கட்டுரை கொச்சைப்படுத்தவில்லை. ஆனால் பெரும்பாலானவர்கள் பதவிகளுக்காகவும் நலன்களுக்காகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சார்ந்து இருப்பவர்கள்தான். அவர்கள் எல்லாரும் கொள்கைவாதிகள் என்றோ நேர்மையானவர்கள் என்றோ எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அருகில் இருப்பவர்கள் யார் யார் என்று ஒவ்வொருத்தராக எடுத்துப் பார்த்தால் அதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். அதில் எத்தனை பேர் கொள்கை வாதிகள்? எத்தனை பேர் நேர்மையான வாழ்க்கைப் பின்னணியைக் கொண்டவர்கள்? எத்தனை பேர்களுக்கு சமூகத்தில் கௌரவமான ஒரு இடம் இருக்கிறது? ஆனால் இந்த கேள்விகள் எல்லாவற்றுக்கும் அப்பால் அவர்கள் கடுமையான உழைப்பாளிகளாகவோ அல்லது சிறந்த ஒழுங்கமைப்பாளர்களாகவோ இருப்பதனால் அரசியலில் முன்னேறியிருக்கிறார்கள் என்பது தான் சரி.எனவே தேர்தலில் கடைசி நேரத்தில் ஏற்பட்ட மனமாற்றம் எனப்படுவது கொள்கை ரீதியானது என்பதை விடவும் நலன் சார்ந்து அதாவது தலைமை பொறுப்பு மாறப் போகின்றது என்பது தெரிந்து ஒரு பகுதியினர் தடம் மாறினார்கள் என்றும் வியாக்கியானம் செய்ய முடியும்.

இப்பொழுது சிறீதரனுக்குள்ள சவால் என்னவென்றால் அதைக் கொள்கை வெற்றியாக அவர் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதுதான். அதாவது கடந்த 15 ஆண்டுகளாக கட்சிக்குள் தமது கொள்கை காரணமாக குரல் எழுப்ப முடியாதவர்களாகக் காணப்பட்டவர்களை ஸ்ரீதரன் எவ்வாறு பாதுகாப்பார்? பலப்படுத்துவார்? என்பதைப் பொறுத்துத்தான் அது ஒரு கொள்கை வெற்றியா இல்லையா என்பதனை எதிர்காலத்தில் கணிப்பிடலாம்.

தேர்தலை வைக்க வேண்டும் என்றும் தேர்தலைத் தவிர வேறு வழியில்லை என்றும் ஒரு நிலையை ஏற்படுத்தியது சுமந்திரன்தான். தேர்தலை நோக்கி கட்சியைத் தள்ளியது அவர். ஏனென்றால் ஒரு தேர்தல் நடந்தால் தனக்கு வெற்றி நிச்சயம் என்று அவர் கணக்குப் போட்டிருந்தார். அதை நோக்கி பல ஆண்டுகளாக அவர் உழைத்திருந்தார். தன்னைச் சுற்றி ஒரு விசுவாசிகள் கூட்டத்தை அவர் கட்டி எழுப்பி வைத்திருந்தார். அந்த விசுவாசிகளில் பெரும்பாலானவர்கள் நலன்களின் அடிப்படையில் தான் அவரோடு நின்றார்கள். சிறுதொகையினர், அவர் கெட்டிக்காரன் பிடித்தவர் அரசியலைக் கெட்டித்தனமாகக் கையாள்வார் என்று நம்பி அவருடன் நின்றார்கள். அடுத்த தேர்தலில் அவர்களுக்கு என்ன பதவி பரிசாகத் தரப்படும் என்பதன் அடிப்படையில்தான் அவருடைய விசுவாசக் கட்டமைப்பு கட்டமைக்கப்பட்டிருந்தது. அதை அவர் உறுதியாக நம்பினார். அந்த அடிப்படையில் வெற்றி தனக்கு என்றும் நம்பினார்.

ஆனால் சிறீதரன் கடைசி நேரப் பிரச்சார உத்திகள் மூலம் சுமந்திரனின் வெற்றியை கேள்விக்கு உள்ளாக்கினார். சிறீதரன் அவமானகரமான ஒரு தோல்வியைத் தழுவுவார் என்று சுமந்திரனின் ஆதரவாளர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை. ஏனென்றால், கடைசி நேரத்தில் தளம்பக்கூடிய கட்சிக்காரர்கள் சிறீதரனின் பக்கம் தாவி விட்டார்கள். அதாவது வெல்லக்கூடியவர் அவர் என்று அனுமானித்து வெல்பவரின் பக்கம் சென்று விட்டார்கள் என்று பொருள். அந்த அடிப்படையில் தான் அது கொள்கை வெற்றியா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது. ஏனென்றால் சுமந்திரனுக்கு விழுந்த வாக்குகள் கொள்கைக்கு எதிரான வாக்குகள் என்று எடுத்துக் கொண்டால் கட்சிக்குள் 137 பொதுச்சபை உறுப்பினர்கள் கொள்கை அற்றவர்கள் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கும்.

சிறீதரனின் அடிப்படைப் பலம் அவருடைய சொந்த தொகுதி. அடுத்ததாக மட்டக்களப்பு. தொடக்கத்திலிருந்து மட்டக்களப்பு உறுப்பினர்கள் தாங்கள் தேசியத்தின் பக்கம் என்று திரும்பத் திரும்பக் கூறி வந்தார்கள். அப்படித்தான் யாழ்ப்பாணம் தீவுப் பகுதிக் கிளையும் உறுதியாக சிறீதரனோடு நின்றது. தீவுக்களுக்கென்று பெருமைக்குரிய ஒரு முன்னுதாரணம் உண்டு. தமிழரசுக் கட்சி மிகப் பலமாக காணப்பட்ட காலகட்டத்திலும் காவலூர் நவரத்தினம் அதற்கு எதிராகக் கேள்விகளைக் கேட்டார். அமிர்தலிங்கத்தை பகிரங்கமாக விவாதத்துக்கு அழைத்தார். தனி நாட்டுக் கோரிக்கையின் தந்தையர்களில் ஒருவராகிய காவலூர் நவரத்தினம் அவருடைய சுயாட்சிக் கழகத்தைக் கட்டி எழுப்பிய போதும் அவருக்குப் பக்கத் துணையாக இருந்தவர்கள் பெரும்பாலானவர்கள் தீவுகளைச் சேர்ந்தவர்கள்தான். தீவுகளின் அந்த முன்னுதாரணம் சிறீதரனுக்கு யாழ்ப்பாணத்தில் நம்பிக்கை ஊட்டும் பலங்களில் ஒன்றாக இருந்தது. தீவுக் கிளையைச் சேர்ந்தவர்களின் தொகை குறைவுதான். ஆனாலும் அவர்கள் தொடக்கத்தில் இருந்து கிளிநொச்சியைப் போல மட்டக்களப்புப் போல சிறீதரனின் பக்கம் உறுதியாக நிலை எடுத்து நின்றார்கள்.

இதில் யார் யார் கடைசி நேரத்தில் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார்கள் என்ற விவாதத்தை இனி விடுவோம். இப்பொழுது சிறீதரனுக்கு ஒரு பொறுப்புத் தரப்பட்டிருக்கிறது. தமிழ் அரசியலில் இப்போதுள்ள சீரழிவைக் கருதி கூறின் கட்சியையும் தமிழரசியலையும் ஒரு திருப்தியான வடிவத்துக்கு கொண்டு வருவதற்கு இரண்டு ஆண்டுகள் போதாது.

சிறீதரனுக்கு முன்னால் உள்ள பெரிய சவால் சுமந்திரனின் விசுவாசிகளை எவ்வாறு கையாள்வது என்பது. சுமந்திரன் விசுவாசிகளை மட்டுமல்ல அவருடைய சொந்த தேர்தல் தொகுதிக்குள்ளேயே அவருக்கு பலமான எதிர்ப்பு அணி உண்டு. சந்திரகுமாரின் தலைமையிலான சமத்துவக் கட்சி அவருக்கு தொடர்ந்தும் சவாலாக இருக்கும்.

தனது மாவட்டத்தில் தனக்கு வெளியே நிற்கும் பெருந்தொகை வாக்காளர்களை சிறீதரன் எவ்வாறு கையாளப் போகிறார்? தமிழரசுக் கட்சியின் ஏனைய மாவட்டக் கிளைகளோடு ஒப்பிடுகையில் கிளிநொச்சியில் தமது கட்சியின் எதிரிகளை துரோகிகளாகக்காட்டும் போக்கு கிளிநொச்சியில் தான் அதிகமாக உண்டு. போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தை தொடர்ந்தும் அவ்வாறு துரோகி தியாகி என்று பிரித்து வைத்திருப்பது தவறு. சிறீதரன் இந்த விடயத்தில் கடந்த காலத்தில் இருந்து கற்றுக்கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டும்.

முதலில் அவர் தன் சொந்த மாவட்டத்துக்குள் தனது பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அடுத்ததாக கட்சிக்குள் சுமந்திரனின் விசுவாசிகளை எப்படி வென்றெடுக்கலாம் என்று முயற்சிக்க வேண்டும். அதன்பின் உள்ளதில் பெரிய கட்சி என்ற அடிப்படையில் ஏனைய கட்சிகளோடு எப்படி ஒரு பொது நிலைப்பாட்டிற்கு வருவது என்று சிந்திக்க வேண்டும்.

ஏனென்றால் விக்னேஸ்வரன் கூறுவதுபோல சமஸ்டியை அடைவதற்கு யாரிடமும் தெளிவான வழி வரைபடம் கிடையாது. நாடாளுமன்றத்துக்கு ஊடாக சமஸ்டியை பெற முடியாது. எனவே நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒரு மக்கள் இயக்கத்தால் வழி நடத்தப்படும் அரசியல் அவசியம். ஒரு மக்கள் இயக்கம் என்று வந்தால் கட்சி வேறுபாடுகளைக் கடந்து அதைக் கட்டியெழுப்ப வேண்டும். நாடாளுமன்ற அரசியலால் மட்டும் சமஸ்டியை அடைய முடியாது. அதற்கு தீர்க்க தரிசனம் மிக்க வெளியுறவு அணுகுமுறைகள் அவசியம். அதற்கு வேண்டிய வெளியுறவுத் தரிசனம் அவசியம். முதலில் தமிழரசுக் கட்சி தனக்கென்று தெளிவான வெளியுறவுக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும். அதற்கு வேண்டிய நிபுணர்கள் அடங்கிய வெளியுறவுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். நிச்சயமாக சுதந்திரனுக்கு அங்கே முக்கியமான இடம் தரப்பட வேண்டும். ஒரு கட்டமைப்பை உருவாக்கினால் யாரும் தனி ஓட்டம் ஓட முடியாது. சிறீதரனுந்தான்.

எனவே சமஸ்ரியை அடைவதற்கான வழி எது என்பதனை தமிழரசுக் கட்சி தெளிவாகக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த வழியை நோக்கிக் கட்சியைச் செலுத்த வேண்டும். சிறீதரன் அதற்குத் தயாராக இருந்தால் தமிழரசுக் கட்சியின் 74ஆவது ஆண்டுயாவது ஒப்பீட்டளவில் முன்னேறிய ஆண்டாக மாற்றியமைக்கலாம்.

---



# மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தினர் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்"






கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் "மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தினர்" நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்" கடந்த வாரம் மார்க்கம் நகரில் அமைந்துள்ள ஆர்மடேல் சனசமூக நிலைய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் திரு சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார உறுப்பினர் யுனைற்றா நாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி தொடர்ந்து மார்க்கம் நகர சபை சார்பான வாழ்த்துப் பத்திரம் ஒன்றையும் வழங்கிச் சென்றார்.

சிறப்புரை ஆற்றுவதற்காக அழைக்கப்பெற்றிருந்த பொன்னையா விவேகானந்தன் அவர்கள் சிறப்பானதும் அழகியதுமான உரையை ஆற்றினார். தமிழ் மக்களது பண்டைய காலத்து பண்பாட்டு முறைகள் மற்றும் எவ்வாறு எமது மக்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் விவசாயத்தை செய்து "சூரியனன் வழிபட்டு அதன் பலனை அனுபவித்தார்கள் போன்ற விடயங்களை தெளிவான முறையில் எடுத்துரைத்தார உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கமும் அங்கு உரையாற்றினார். சங்கத்தின் பல அங்கத்தவர்கள் பாடல்களைப் பாடியும் நாடகங்களை நடத்தியும் சபையோரை மகிழ்வித்தனர். மேற்படி விழா சிறப்பாக நடைபெறுவதற்கு சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் ஒத்துழைப்பை வழங்கினார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நடத்தும்
அமரர் அருட்கவி தம்பிஜயா
ஞானகணேசன்
அவர்களுக்கான நினைவேந்தல் கூட்டம்

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர், முன்னாள் தலைவர் அமரர் அருட்கவி தம்பிஜயா ஞானகணேசன் , அவர்களுக்கு மலரஞ்சலி செலுத்தி, நினைவேந்தல் நிகழ்த்துவதற்கு ஒழுங்கு செய்துள்ளோம்.

காலம்: 28-01-2024 ஞாயிற்றுக்கிழமை நேரம்: காலை 10:00 மணி

இடம்: Scarborough Civic Centre

(150 Borough Dr, Scarborough, ON M1P 4N7)

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| க.குமரகுரு | பவானி தர்மகுலசிங்கம் | சி.சண்முகராஜா |
| (தலைவர்) | (செயலாளர்) | (பொருளாளர்) |
| (647-224-8871) | (437-991-8202) | (416-939-9171) |

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இராசபோசனம் சிறுப்பிட்டியில் நிகழ்ந்த சிறுதானியப் பொங்கல் விழா

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தைப்பொங்கல் விழா சிறுதானியப் பொங்கல் விழாவாகச் சிறுப்பிட்டியில் கோலாகலமாக இடம்பெற்றுள்ளது. சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூகநிலைய முன்றலில் ஞாயிற்றுக்கிழமை (21.01.2024) மாலை இராசபோசனம் என்னும் கருப்பொருளில் இப்பொங்கல்விழா நிகழ்ந்துள்ளது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதவிருந்தினராகவும், யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுமுகாமையாளர் பொ. செல்வராசா சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பாரம்பரிய உணவான சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குச் சிறுதானிய விதைகளை இலவசமாக வழங்கி அறுவடையின் பின்னர் அவர்களிடமிருந்து வழங்கிய விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகளை மீளப்பெற்று வேறு விவசாயிகளுக்கு வழங்குகின்றது. இத் திட்டத்தின் ஒரு படியாகவே அருகிப்போய்விட்ட சிறுதானிய உணவுப்பண்பாட்டை மீளுருவாக்கும் நோக்கில் தைப்பொங்கலை கிராமங்களில் சிறுதானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடி வருக்கிறது. இந்த ஆண்டு சிறுப்பிட்டி மேற்கில் ஜனசக்தி சனசமூக நிலையத்தினருடன் இணைந்து கொண்டாடியுள்ளது.

ஏராளமானோர் கலந்துகொண்ட சிறுதானியப் பொங்கல் விழாவில் உறியடி, வழுக்குமரம் ஏறுதல் ஆகிய பாரம்பரிய விளையாட்டுக்களோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றிருந்தன. பங்கேற்ற அனைவருக்கும் வரகரிசிப் பொங்கலும், குரக்கன் கூழும் பரிமாறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





# மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்ற பொங்கல் விழா



**- மன்னார் நிருபர் (21-01-2024)**

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழர் தைத்திருநாள் பொங்கல் விழா நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (21) காலை மன்னார் வாழ்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கனகேஸ்வரன், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேசச் செயலாளர் திருமதி. கனகாம்பிகை சிவசம்பு, ஓய்வு நிலை மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுகந்தி செபஸ்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு பேச்சாளராக மன்னார் உதவி தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராசா கலந்து கொண்டார்.

இதன் போது குறித்த நிகழ்வில் நடனம்,கிராமிய நடனம், கவிதை, கிராமியப்பாடல், மற்றும் சிறப்பு பட்டிமன்றம் ஆகியவை இடம் பெற்றது.

மேலும் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு மன்னார் தமிழ்ச் சங்கத்தால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.








# இந்திய மீனவர்கள் விடுவிப்பு வெளிவிவகார அமைச்சின் அழுத்தத்தினாலே கடற்றொழில் அமைச்சர் விடுவிக்க இணங்கியிருக்கலாம்

## வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளரும் ஊடக பேச்சாளருமான என்.எம்.ஆலம்

**- மன்னார் நிருபர் (21-01-2024)**

இந்திய மீனவர்கள் விடுவிப்பு வெளிவிவகார அமைச்சின் அழுத்தத்தினாலே கடற்றொழில் அமைச்சர் விடுவிக்க இணங்கியிருக்கலாம் என சந்தேகம் எழுவதாகவும், மீனவர்களின் விடுவிப்பிற்கு வடக்கு மீனவர்களாகிய நாங்கள் எதிர்ப்பை தெரிவிப்பதாக வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளரும் ஊடக பேச்சாளருமான என்.எம். ஆலம் தெரிவித்தார்.

21-01-2023 அன்று மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக வெளி வந்திருக்கும் தகவல்கள் என்ற ரீதியில் வடபகுதியில் இருக்கும் மீனவர்கள் இதனை எவ்வாறு நோக்குகிறார்கள், இந்த பிரச்சினையை அரசாங்கம் எவ்வாறு முடிவுக்கு கொண்டு வர இருக்கிறார்கள் என்பது தொடர்பாக வெளிப்படுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக ஒரு மாத காலப்பகுதிக்குள் வடக்கில் இருக்கின்ற நெடுந்தீவு, பருத்தித்துறை அதற்கு அப்பால் சில நாட்களுக்கு முன் மன்னார் கடற்பரப்புக்குள் கைது செய்யப்பட்ட 40க்கும் மேற்பட்ட இந்திய தமிழக மீனவர்கள் நேற்றைய தினம் கடற்றொழில் அமைச்சின் சிபாரிசுக்கு அமைய நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்கப்படுவதாக தகவலை நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம்.

இந்த தகவல் உண்மையில் கடற்றொழில் அமைச்சரின் நிலைப்பாடு என்ன? என்பதை கேள்வி குறியாக்கியுள்ளது.

குறிப்பாக இதே போன்ற ஒரு விடயம் சில மாதங்களுக்கு முன்னர் இந்திய நிதியமைச்சர் தமிழ்நாட்டுக்கு வந்த போது அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எந்தவித சட்ட நடவடிக்கைக்கு உட் படுத்தாத மீனவர்கள் 20 பேர் விடுவிக்க பட்டிருந்தனர்.

அந்த நேரத்திலும் நாங்கள் அதற்கு எங்களுடைய எதிர்ப்புக் குரலை வெளியிட்டு இருந்தோம். தற்போது கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் 40 மீனவர்களை விடுவிப்பதற்கு நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இல்லாத நிலையில் வெளிவிவகார அமைச்சரின் வேண்டு கோளுக்கு அமைய கடற்றொழில் அமைச்சர் விடுவிப்பதாக அந்த செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

எனவே நாட்டில் ஜனாதிபதி இருந்தாலும் இதே நிலைதான் கடற்றொழில் அமைச்சர் இருந்தாலும் இந்த நிலை தான் என்றால் ஏன் இந்த கைதுகள் இடம் பெறுகின்றது? இவ்வளவு பணம் செலவு செய்து இந்த மீனவர்களை கைது செய்ய வேண்டுமா? என்ற கேள்வி இருக்கிறது.

நாங்கள் வலியுறுத்துகின்ற ஒரே விடயம் இந்திய மீனவர்களின் வருகை முற்று முழுதாக வடபகுதி கடற்பரப்புக்குள் அனுமதிக்க கூடது என்பதுதான்.

அதை வலியுறுத்தியதாக தான் நாங்கள் தொடர்ந்து இந்த கைதுகளை மேற்கொள்ளுமாறும் அவர்களுடைய படகுகளை பறிமுதல் செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம்.

ஆனால் வட பகுதி மீனவர்கள் முன்வைக்கின்ற எந்த கோரிக்கையையும் செவிசாய்க்காத அரசாங்கமும் இந்த கடற்றொழில் அமைச்சும் வெறுமனே இந்திய உயர்மட்ட தலைவர்கள் தமிழ் நாடு வருகின்ற போது அவர்களால் விடுக்கப் படுகின்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கின்றோம் என்று கூறி விடுகின்றார்கள் தொடர்ந்து இந்த நிலைதான் காணப்படுகிறது.

இது மனிதாபிமானமா? அல்லது பயமா அவர்களுக்காக நாங்கள் பயப்படுகின்றோமா? ஒரு பெரிய நாடு சிறிய நாட்டை பயம்காட்டி தங்களுடைய வேலையை செய்விக்கின்றார்களா? என்ற கேள்வியை நாங்கள் முன் வைக்கின்றோம்.

நல்லிணக்க அடிப்படையில் நாம் விடுவது தவறு என்று நாங்கள் கூறவில்லை. ஆனால் நல்லிணக்கம் என்பது என்ன? ஒருவர் ஒரு தரம் வருகின்றார் மனிதாபிமானமாக அவரை விடுவிக்கின்றோம், இரண்டாவது முறை அதே தவறு செய்யும் போது எவ்வாறு அந்த மனிதாபிமானத்தை அல்லது நல்லிணக்கத்தை பற்றி பேசுவது?

எமது வளங்களை அழிக்கிறார்கள், எமது எல்லையை தாண்டி எமது கரையோரங்களுக்கு வந்து இந்த வேலை செய்கிறார்கள், எனவே அவர்களை கைது செய்யுங்கள் அவர்களுடைய படகுகளை பறிமுதல் செய்யுங்கள் என நாங்கள் கூறுவது வெறுமனே கூச்சல் அல்ல. எமது வாழ்வாதார இழப்பு, இந்த நாட்டின் இறைமை பறிபோகும் தன்மையை இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் இங்கு வாழ்கின்ற மக்கள் என்ற வகையில் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்.

எனவே நல்லிணக்கம் என்பதை இந்த அரசு சரியாக புரிந்து கொள்ளவில்லை. அல்லது சரியாக புரிந்து கொண்டு அந்த மீனவர் விடுவிப்பை செய்யவில்லை குறிப்பாக ஒருவரை விடுவிப்போம் என்றால் எந்த நாடாவது சரி அந்த கோரிக்கை விடுப்பவரோ சரி தயவு செய்து அந்த நாட்டுக்கு போகாதீர்கள்.

அந்த நாட்டில் இருக்கின்ற மக்களை சுரண்டாதீர்கள், அந்த மக்களுக்கு துன்பத்தை கொடுக்காதீர்கள், நமது எல்லைக்குள் தொழில் செய்யுங்கள், கரையோரம் வரை போகாமலாவது தொழில் செய்யுங்கள், என்ற கோரிக்கையை நல்லிணக்கம் விடுபவர் கூட தெரிவிக்கலாம்.

ஆனால் இங்கு கேட்பவரும் விடுப்பதில்லை நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்கும் அரசும் கூட இந்த நிபந்தனையை விதிப்பதும் இல்லை.

எனவே வெறுமனே பிடிப்பதும் அவர்களை ஐந்து, பத்து நாளில் விடுவிப்பது தான் இந்த மனிதாபிமானமா? என்ற கேள்வி வட பகுதி மீனவர்கள் மத்தியில் இருக்கிறது.

எனவே ஒன்றைக் குறிப்பிடலாம். இந்த நடைமுறை இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இந்த கடல் வளங்களை கையாளுவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று செய்யப்படுகிறது அந்த ஒப்பந்தத்தில் முழுக்க முழுக்க இந்திய நலன் சார்ந்த ஒப்பந்தமாக இருக்கிறது.

வெறுமனே கடற்றொழில் அமைச்சர் நான் தான் கடற்றொழில் அமைச்சர் நான் தான் தீர்மானம் எடுப்பேன் என கூறி வந்தாலும் நாட்டில் ஒரு வெளிவிவகார கொள்கை இருக்கின்றது.

நாட்டுக்கிடையில் ஒப்பந்தம் இருக்கிறது. அந்த ஒப்பந்தம் தான் புதிதாக கொண்டு வர இருக்கும் சட்ட வரைப்பு. அதில் வெளிநாட்டு படகுகளை அனுமதியோடு வரியை பெற்றுக் கொண்டு வசூலை பெற்றுக் கொண்டே விடுவிப்பது என்பது அந்த வெளிவிவகார கொள்கையின் உள்ள விடயம்.

எனவே நாங்கள் எவ்வாறு நான் அதை திருத்த முற்பட்டாலும் அந்த விடயத்தில் அரசு விட்டு கொடுப்பை செய்யுமா என்பது கேள்விக்குறி.

எனவே வெளிவிவகார அமைச்சு இதில் முழுமையாக தலையிட்டு இருக்கிறது. வெளிவிவகார அமைச்சின் அழுத்தினால் தான் கடற்றொழில் அமைச்சர் இந்த முடிவை எடுத்திருப்பார் என்று எண்ணத் தோன்றுகின்றது. நான் தான் கடற்றொழில் அமைச்சர் நான் எடுப்பதுதான் தீர்மானம் என்பதை போல இருப்பதை விடுத்து இப்போதாவது அவர் தன்னுடைய நிலையில் இருந்து மாற்றத்தை பெற வேண்டும்.

அல்லது எங்களுக்கு ஒரு சரியான விடயத்தை குறிப்பிட வேண்டும். தொடர்ச்சியாக அந்த வி'யத்தை மட்டும் கூறுவாராக இருந்தால் நாங்கள் அவர் மீது சந்தேக பார்வையோடு பார்க்க வேண்டிய தேவை ஏற்படும் என்பதை வலியுறுத்தி கூறுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இரணைமடு கமக்காரர் அமைபுக்களின் சம்மேளனம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்



தமக்கு ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு இழப்பீடு வழங்க கோரியே கையளித்தனர்.

காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு சென்ற விவசாயிகள் ஜனாதிபதிக்கான மகஜரை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

2023 மற்றும் 2024ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 72 ஆயிரம் ஏக்கர் கால போக செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் அதிக மழை மற்றும் நோய்த்தாக்கம் காரணமாக பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 1.5 மெற்றிக் தொண் அறுவடை செய்திருந்தோம். ஆனால் இம்முறை 0.5 மெற்றிக் தொண் மாத்திரமே அறுவடை செய்ய முடிந்துள்ளது. இதேவேளை செய்கைக்காக ஏக்கர் நன்றுக்கு 130,000 ரூபா செலவிடப்பட்டது. ஆனால் 15 ரூபாவையும் பெறமுடியாத நிலையில் ஏக்கர் ஒன்றுக்கு 115,000 ரூபா நட்டத்தை அடைந்துள்ளோம்.

எமது நிலையை கருத்தில் கொண்டு அடுத்த ஆண்டில் செய்கை மேற்கொள்ளும் வகையில் நட்ட ஈட்டினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து உதவுமாறு குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர், நெல்லுக்கான நிர்ணய விலை இல்லாமையால் தாம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் அதிபரிடம் கூறினர்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தாலும் கோரப்பட்டுள்ளது. அத்துடன் அபிவிருத்தி குழு கூட்டத்திலும் இது அமைச்சரால் போடப்பட்டு சம்மந்தப்பட்ட அமைச்சரிடமும் பேசப்பட்டது.

விரைவில் தீர்வு எட்டப்படும் எனவும் தெரிவித்தார்.



குறித்த மகஜரின் பிரதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் கிடைக்கும் வகையில் அவரது இணைப்பாளரிடமும் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜர் ஜனாதிபதிக்கு உடன் அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# மன்னாரில் 108 பானைகளில் பொங்கி இடம் பெற்ற பிரமாண்ட பொங்கல் விழா



**- மன்னார் நிருபர் (23-01-2024)**

மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் இந்து அமைப்புக்கள் ஏற்பாட்டில் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள ஈச்சளவாக்கை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலய நிர்வாகத்தினரின் ஒழுங்கமைப்பில் 2024 ஆம் ஆண்டுக்கான பிரமாண்ட பொங்கல் விழா செவ்வாய்கிழமை (23) காலை ஈச்சலவாக்கை மீனாட்சி அம்மன் ஆலய வளகத்தில் மிகவும் சிறப்பாக நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீஸ் கந்தகுமார், மற்றும் மறவன்புலவு சச்சிதானதன், அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பிரதேச செயலாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் ஈச்சளவாக்கை பாடசாலையில் இருந்து விருந்தினர்கள் தமிழ் பாரம் பரிய மேல தாள வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டு 108 பானைகளில் பாரம் பரிய முறைப்படி பொங்கல் பொங்கி நிகழ்வு ஆரம்பமானது.

அதனை தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலக கலாச்சார உத்தியோகஸ்தர்களின் பங்குபற்றுதலுடன் 150 பேர் இணைந்து பாரம்பரிய நடனம் ஒன்றை அரங்கேற்றியதுடன் பல்வேறு கலை நிகழ்வுகள், போட்டி விளையாட்டுக்கள் என்பனவும் இடம் பெற்றது.

அதே நேரம் பொங்கல் விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்படமை குறிப்பிடத்தக்கது.





# வடமராட்சி வடக்கு பிரதேச மரம் நடுகை விழா




வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மரம் நடுகை விழா காலை 10:30 மணியளவில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் செ. சுபச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினரதகள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு அரங்கில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மங்கள சுடர்களினை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சி. சத்தியசீலன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் செ. சுபச்செல்வன், சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி. அருந்தவம் செந்தூரன், கிராம சேவகர் நி. விமல்சினி, அபிவிருத்தி உத்தியோகத்தர் கை. தீபா, தும்பளை மனோன்மணி அம்மன் ஆலய தலைவர் ம. பகீரதன் இந்து கலாசார அலுவலர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.



தொடர்ந்து தலைமை உரையை வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் செ. சுபச்செல்வன், பிரதம விருந்தினரும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சி. சத்தியசீலன், இன்றைய மரம் நடுகைக்கான கொடையாளரும், green layer சர்வதேச நிறுவனத்தின் தலைவருமான பா. சசிகுமார் தும்பளை மனோன்மணி அம்மன் ஆலய தலைவர் ம. பகீரதன் ஆகியோர் ஆற்றினர்.

தொடர்ந்து விருந்தினர்களால் ஆலய சூழலில் மரக்கன்றுகள் நாட்டி வைத்தனர். இதில் தும்பளை தெற்கு கிராம மக்கள், தும்பளை தெற்கு மனோன்மணி அம்மன் ஆலய தலைவர் நிர்வாகிகள, வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கத்தில் தை மாதம் 27 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் சட்ட மாநாடு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத் துறையானது 2005 ஆம் ஆண்டிலிருந்து சடடமாணிப் பட்டத்தை வழங்குகின்ற ஒரு உயர் கல்வி நிறுவனமாக இயங்கி வருகின்றது. அதன் கல்விப்பணியின் பிறிதொரு மைல்கல்லாக யாழ்ப்பாணத்தில் சட்ட மாநாடு ஒன்றை நடாத்த விரும்பியது. அதற்கமைய இந்தியாவின் புகழ் பெற்ற சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர்கள் நிறுவனத்துடன் இணைந்து தை மாதம் 27 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கத்தில் யாழ்ப்பாண சட்ட மாநாடு என்னும் பெயரிலான மாநாட்டினை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண சட்ட மாநாடானது நெருக்கடிகளுக்கூடான வழிகள் என்னும் தொனிப்பொருளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டின் நோக்கங்களாக சட்டப் பரப்பில் அதிகம் பேசப்படாத விடயங்ளைப் பேசுதல், பன்மைத்துவ ஆய்வை ஊக்குவித்தல், அவ்வகை ஆய்வு முயற்சிகளை கலந்துரையாடுவதற்கான களமொன்றை அமைத்தல்,

சட்டப் புலமையாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரையும் அவர்களின் ஆய்வுச் சிந்தனைகளையும் ஒன்றிணைத்தல், எழுத்திலுள்ள சட்டத்திற்கும் அதன் செயற்பாட்டிற்குமான இடைவெளியைக் குறைத்தல், சட்ட மாணவர்களுக்கு சடடத்துறை சார் ஆய்வுச் சிந்தனைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் துறைசார் நிபுணர்களுடனான வலையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

முதல் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் மாண்புமிகு சட்டமா அதிபர் திரு. சஞ்சய் ராஜரட்ணம் அவர்களும் கௌரவ விருந்தினராக ஐக்கிய நாடுகளின் முன்னாள் நேருதவிச் செயலாளரும் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுமான கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதல் நாள் நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இலங்கையின் புகழ்பூத்த ஜனாதிபதி சடடத்தரணி கலாநிதி கனகீஸ்வரன் அவர்களினதும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் சொர்ணராஜா அவர்களினதும் திறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

இலங்கையில் பகிரங்க சடடத்தின் எதிர்காலம்: நெருக்கடிகளும் சவால்களும் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வொன்றும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாள் நிகழ்வில் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு யசந்த கோதாகொட அவர்கள் பிரதம விருந்தினராகவும் அரசியலமைப்புச் சட்ட நிபுணர் ஜனாதிபதி சட்டத் தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வின் சிறப்பம்சமாக அமெரிக்காவின் யாலே (Yale) பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைத் துணைப் பேராசிரியர் திரு. ரோஹித் டே அவர்களும் சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்தின் முகாமைத்துவப் பங்காளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி வினோத் சுரனா அவர்களும் திறப்புரைகள் ஆற்றவுள்ளனர்.

அத்துடன் இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மேலெழுவதற்கான சட்டத்தின் வகிபாகம் என்னும் தலைப்பிலான கலந்துரையாடலானது இரண்டாம் நாளின் மறறொரு சிறப்பு நிகழ்வாகும்.

மாநாட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆயுவுக் கட்டுரைச் சுருக்கங்கள் இரண்டு நாள் அமர்வின் போதும் ஆய்வாளர்களால் வாசிக்கப்படவுள்ளமையும் யாழ்ப்பாண சட்ட மாநாட்டின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

சமகாலப் பிரச்சினைகளினை முன்னிறுத்தியதாக பல்வேறு சட்ட விடயங்களை ஆராய்ந்து அதனூடாக இலங்கையின் வடபிராந்தியத்தின் பொருளாதார, சமூக விடயங்களை வினைத்திறனாக அணுகும் தன்மையிலும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண சட்ட மாநாட்டில் பங்குபற்றிப் பங்காளிக்குமாறு ஆர்வமுள்ளோர் அனைவரையும் பணிவன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

நன்றி, - மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழு

# கொள்கை ரீதியாக ஒருமித்து செயற்படுவோம் – சிறீதரன் எம்.பி அழைப்பு



**- நடராசா லோகதயாளன்**

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறிருந்ததோ அவ்வாறான நிலையை - தமிழ் மக்களின் அரசியல் ஏகபிரதிநிதிகள் என்ற நிலையை - தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எய்தவேண்டும். எனவே தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ்க்கட்சிகளும், தம் கட்சிகளின் நலனை முன்னிறுத்தாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஓரணியாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணையுமாறு அழைக்கின்றேன் - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தலில் வெற்றிபெற்று புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட சிறீதரன், இந்தத் தேர்தல் தொடர்பிலும் தமிழரசுக் கட்சியின் எதிர்காலப் பயணப்பாடு தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது பெருவிருப்பம். அதனை முன்னிறுத்தியே தமிழரசுக் கட்சியின் தலைமைப்பதவிக்கான போட்டியில் நின்று, இப்போது தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். இந்தநிலையில் தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புத்துயிரூட்டுவதே என் முன்னுள்ள முதற்பணியென எண்ணுகிறேன்.

தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாக குரல் கொடுத்த, மக்களுக்காக அரசியல் பணி செய்த சக தமிழ்த்தேசியக் கட்சிகள் சிலபல காரணங்களால் பிரிந்து தனிவழியே பயணிக்கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது. அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன. 2009 க்கு முன்னர் கூட்டமைப்பு எப்படி தமிழ் மக்களின் அசைக்கமுடியாத சக்தியாக மிளிர்ந்ததோ, அதே நிலையை மீண்டும் எட்டவேண்டும் என்பதே தமிழ்மக்களின் பெருவிருப்பம். எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்காக அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் கடந்த கால கசப்பான நினைவுகளைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

தமிழ் மக்களின் நலனுக்காகவும் தமிழ்த் தேசியத்தின் நலனுக்காகவும் ஓரணியில் ஒன்றித்திருப்பது எம்முன்னால் உள்ள பெரும்பொறுப்பு. அதற்காக தமிழரசுக் கட்சி மட்டுமல்லாது, சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு உழைக்கவேண்டும். சகல தமிழ்த் தேசியக்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டை துரிதகதியில் முன்னெடுக்கவுள்ளேன். அதன் மூலம் மக்களின் உரிமைகளையும், மாவீரர்களின் கனவுகளையும் வென்றெடுப்போம் - என்றார்.

# படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கான எண்ணம் இருக்கிறதா––இல்லையா?

## பாதுகாப்பு அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி



**வி**டுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிந்து 15 ஆண்டுகள் ஆகும் நிலையிலும் இன்னும் படையினர் வசம் ஆயிரக்கணக்கான ஏக்கர் அளவிற்கு காணிகள் உள்ளன. இது குறித்து தொடர்ச்சியாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழர் தரப்பால் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஆனால் இற்றைவரை அந்தக் காணிகள் எப்போது முழுமையாக விடுவிக்கப்பட்டு, வடக்குகிழக்கில் இயல்பு நிலை திரும்பும் என்பதற்கு அரசாங்கம் உரிய பதிலை அளிக்கவில்லை.

பார்க்கிறோம், பேசுகிறோம், விடுவிக்கிறோம் என்ற வகையிலேயே பதில்கள் அரச தரப்பிலிருந்து வந்துள்ளன. இந்நிலையில் இந்தப் பிரச்சனை இலங்கை நாடாளுமன்றத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் சாணாக்கியன் ராசபுத்திரனால் எழுப்பப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை (24.01.2024) கேள்வி-பதில் நேரத்தின் போதே இதை அவர் பாகாப்பு அமைச்சரிடம் எழுப்பினார்.

வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் முடிந்து தற்போது 15 வருடங்கள் முடிவடையப் போகின்றது. 15 வருடங்களுக்குப் பின்னரும் குறிப்பாக இந்த வடக்கு கிழக்கு மாவட்டங்களில் மாத்திரம் இராணுவ முகாம்களை பாதுகாப்பு கருதி வைத்திருக்கின்றோம் எனக் கூறுவதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. குருக்கள்மடம் பாடசாலைக்குரிய மைதானக் காணியானது இராணுவ கட்டுப்பாட்டினுள் இல்லை எனக் கூறினாலும்; தற்போது வரை அந்த மைதானக் காணி இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. முறக்கொட்டாஞ்சேனையில் இராணுவ முகாம் அமைந்திருக்கும் பாடசாலைக்கு பதிலாக பிறிதொரு பாடசாலையினை அமைத்ததாக கூறியுள்ளீர்கள். புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை ஒரு ஆற்றோர பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதனை அக்கிராம பெற்றோர்களோ, பிள்ளைகளோ விரும்பவில்லை. தற்காலிகமான மாற்று வழியாக அப்பாடசாலையை பயன்படுத்தினாலும் தொடர்ந்து அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. முறக்கொட்டாஞ்சேனையில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள பாடசாலை பாதுகாப்பிற்கு முக்கியம் எனக் கருதுகின்றீர்கள். கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரை நீங்கள் பயணம் செய்யவில்லை என்று நினைக்கின்றேன். ஏனெனில் பொலன்நறுவை - மன்னம்பிட்டி வரை ஏராளமான காணிகள் உங்களது இராணுவ முகாம்களை அமைப்பதற்கு காணப்படுகின்றது. அவ்வாறிருக்க நீங்கள் கிராமத்தின் நடுப்பகுதியில் இருக்கும் காணியே முக்கியம் எனக் கருதுவதை நாங்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

வடக்கில் பலாலி பிரதேசத்தில் கூட மக்களுடைய நிலங்களில் இராணுவத்தினர் நிலத்திற்கு உரிமையுடைய மக்கள் வேலியால் பார்க்கும் வண்ணம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். மக்களுடைய காணிகளை இராணுவத்தினர் அபகரித்துள்ளனர்.

ஜனாதிபதியிடம் ஒவ்வொரு முறையும் சந்தித்து இது தொடர்பில் பேசும் போது ஜனாதிபதி அவர்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் "ஏன் இன்னும் இந்த காணிகள் விடுவிக்கப்படவில்லை" எனக் கேள்வி எழுப்புவார். ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்து ஒரு விடயத்தைக் கூறினால் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி கூறாத விடயங்களை கூறுகின்றார். "இதில் உண்மை பேசுவது ஜனாதிபதியா? அல்லது பாதுகாப்பு அமைச்சரா?" இதுவே என் முதற் கேள்வி என்று கூறிய சாணாக்கியன் ராசபுத்திரன் தொடர்ந்து கேள்விக்கனைகளை தொடுத்தார்.

சுனாமியின் காரணமாக இராணுவ முகாம்களை பாடசாலைக்கு கொண்டு சென்றார்கள். ஆனால் மைதானங்களை தூக்கிக் கொண்டு செல்ல முடியாது. கல்வி கற்பிப்பது என்பது ஒரு கட்டடத்தினுள் மேற்கொள்ளும் விடயமன்று. அதற்கு சிறந்த இடவசதிகள் தேவை. பாடசாலையினை பிரதான வீதியில் கட்டுவதற்கு மைதானத்தினை கொண்டு செல்ல முடியாது. பாதுகாப்பு தொடர்பான விடயங்களுக்காக வேறு காணிகளை உங்களால் பெற்றுக் கொள்ள முடியும். காயங்கேணி பகுதியில் கடற்படை செயற்பாடுகளுக்கு காணி வேண்டும் எனக் கூறி காணிகளை அபகரிக்கின்றனர். பாலையடிவட்டை, தாண்டியடி போன்ற இடங்களிலும் காணி அபகரிப்பு நடைபெற்ற வண்ணமே இருக்கின்றது. ஆகவே "இந்த காணிகளை விடுவிப்பதற்கான எண்ணம் உங்களிடம் இருக்கிறதா? இல்லையா?" என்ற இவ்வாறான கேள்விகள் இன்றைய தினம் பாதுகாப்பு அமைச்சரிடம் எழுப்பினார்.

எனினும் வழமை போல உரிய பதில் ஏதும் அரச தரப்பில் கூறப்படவில்லை.




Happy
Tamil Heritage
Month
அனைவருக்கும்
இனிய தமிழ்
மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்!
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org


மேன்மை கொள் சைவ நீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகைசெய்வோம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
சங்கத்தமிழ் மூன்றும் தா
தமிழ் மரபுத்திங்கள்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும்
முத்தமிழ் கலை விழா
தமிழின் சிறப்பு – தமிழர் திருநாள் – தமிழர் கலைகள் – தமிழர் பண்பாடு
28.01.2024 ஞாயிற்றுக்கிழமை
காலை 10:00 மணிமுதல் 2:00 மணிவரை
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com


இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040
raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca

# டுறம் தமிழ் ஒன்றியத்தின்

# Evolving Eldercare - In-Home Support For Seniors I "வயது ஆகும்"

## முதியோர் பராமரிப்பு - மூத்தவர்களுக்கான வீட்டு ஆதரவு-இலவச சேவை

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support" எனும் சமூக சேவையை அறிமுகப்படுத்துகிறது, இது 55 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குறைந்த வருமானம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய முதியவர்களுக்கு தன்னார்வ அடிப்படையிலான தகுதியான சேவைகளை வழங்குகிறது.

### OUR FREE SERVICES

- Meal Delivery
- Transportation
- Volunteer Drop-offs:
  - -Grocery Assistance
  - -Doctors Appointments
- Friendly Visits
- Light House Keeping Assistance

### SERVING 8 AREAS

- Pickering
- Ajax
- Whitby
- Oshawa
- Clarington
- Brock
- Uxbridge
- Scugog

### எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

**தொடர்பு எண்:**

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

## டுறம் தமிழ் ஒன்றியம்

### வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல்



வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

பாதிக்கப்படக் கூடிய மற்றும் குறைந்த வருமானம் உடைய முதியவர்கள்

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு

### உணவு விநியோக சேவை

(இலவசம்)

**அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்**

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

**Servicing Eight Municipalities In Druham**

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog





**மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்**

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

**தொடர்பு எண்:**

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

கூடுதல் தகவலுக்கு எங்கள் இணையதளத்தை பார்வையிடுங்கள்: dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada

## தன்னார்வலர்கள் தேவை!

## Volunteers Needed!

டுறம் தமிழ் ஒன்றியம் வழங்கும் -வளரும் முதியோர் பராமரிப்பு-வீட்டில் ஆதரவளித்தல்

(Evolving Elder Care In-Home Support)

### Our Free Services :

பின்வரும் சேவைகளை டுறம் பிராந்தியத்தின் முதியோர்களுக்கு வழங்க தன்னலவாளர்கள் தேவை.

- Meal Delivery
- Transportation
- Volunteer Drop-offs:
  - -Grocery Assistance
  - -Doctors Appointments
- Friendly Visits
- Light House Keeping Assistance

### 8 Municipalities:

டுறம் பிராந்தியத்தின் பின்வரும் 8 நகராட்சிகளில் வசிக்கும் முதியோர்களுக்கு சேவை வழங்க தன்னலவாளர்கள் தேவை..

- Pickering,
- Ajax,
- Whitby,
- Oshawa,
- Clarington,
- Brock,
- Uxbridge,
- Scugog.

### Training:

- தன்னலவாளர்களுக்கு அஜாக்ஸில் உள்ள கம்ப்யூடெக் கல்லூரியில் இலவச தன்னலவாளர்பயிற்சி மற்றும் முடித்ததற்கான சான்றிதழ் வழங்கப்படும்.
- Basic CPR மற்றும் முதலுதவி பயிற்சி
- 50 Hதன்னார்வ மணிநேர வாய்ப்பு
- Free Vulnerable Check
- Volunteer Travel Expense $0.58/ per km | தன்னார்வ பயணச் செலவு $0.58/1 கிமீவழங்கப்படும்

### Contact us

எங்களின் தொடர்புக்கு

(647) 968-9549

(647) 286-9549

சேவை செய்ய விரும்பும் தன்னார்வலர்கள் எங்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்:

dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada

# City of Vaughan hosted 'Tamil Heritage Month Celebrations'

# கனடாவின் வோன் மாநகர சபை நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்"







கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள வோன் மாநகரில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் பல்வேறு வகையான பங்களிப்புக்களும் சாதனைகளும் அந்த நகரத்தின் வளர்ச்சிக்கு பெரும்பங்காக விளங்குகின்றன.

இதைக் கருத்திற் கொண்டு மேற்படி மாநகர சபையும் அதன் நகரபிதாவும் மற்றும் அங்கத்தவர்களும் எமது தமிழ் மக்களின் கலை மற்றும் கலாச்சாரப் பண்புகளை மதிக்கும் வகையில் இந்த தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டத்தை கடந்த சில வருடங்களாக நடத்தி வருகின்றனர்.



கடந்த புதன்கிழமை நடைபெற்ற மேற்படி விழாவில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து சிறப்பித்தனர். மேற்படி விழாவை நடத்தவென நியமிக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் அன்பர்கள் துணையாக இருக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

பரத நாட்டியம் மற்றும் கர்நாடக இசைப்பாடல்கள் ஆகியனவும் இடம்பெற்றது. மாநகர பிதா மற்றும் கவுன்சிலர்கள் சிலர் அங்கு வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.




ஆங்கில திட்டத்திற்குரிய
மழலையர்
வகுப்புகளுக்கான பதிவு
பெப்ரவரி இல்
தொடங்குகிறது





இணையதளம் மூலம் பதிவு செய்யவும்:
tdsb.on.ca/kindergarten
வாருங்கள், எங்களுடன் கற்றுக்கொள்ள!
Toronto District School Board

# இந்திய பௌத்தம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உரையாடல் ஏன்?

- என். புவியரசன்

இந்திய பௌத்தம் தொடர்பில் இந்தியாவே இலங்கையில் பேசாதபோது சீனா இந்த விடயத்திற்காக யாழ்ப்பாணம் வந்து பேசுவது ஏன் என்ற வினா தற்போது யாழ்ப்பாணத்தில் பல மட்டங்களில் விவாதிக்கப்படுகிறது.

இந்திய மற்றும் சீன பௌத்த உருவப்படங்களின் ஒப்பீடு என்ற தலைப்பில் இம்மாதம் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கருத்தரங்கு மண்டபத்தில் ஆய்வு ஒன்று இடம்பெற்றது.

இதில் சீனாவின் பீஜிங்கில் உள்ள பீகிங் பல்கலைக்கழகத்தின் பௌத்த நூல்கள் மற்றும் ஆராச்சி மையத்தின் வெளிநாட்டு மொழிகள் பள்ளியைச் சேரந்த பேராசிரியர் லெலே ஹாங் கலந்துகொண்டு இந்த ஒப்பீட்டு ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு இந்த ஒப்பீட்டை பேசுவதன் மூலம் எவருக்கு நன்மை?

அண்டை நாடான இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்திலுள்ள அயோத்தியா நகரில் பால இராமருக்கு இந்திய ரூபா 2000 கோடியில் புதிய நவீன ஆலயம் ஒன்று அமைக்கபட்டு அதில் கற்சிலையாக வடிக்கப்பட்ட பால இராமருக்கு உயிரூட்டும் (பிராண பிரதிஷ்டை) சடங்கு நடைபெற்ற அதே நாளில், இந்தியாவில் பௌத்தம் தொடர்பிலான கருத்தரங்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுள்ளது.

அயோத்தியில் இடம்பெற்ற மத நிகழ்வுகளை இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி முன்னின்று நடத்தினார்.

அதே தினத்திலேயே இலங்கை யாழ்ப்பாணம் பலகலைக்கழகத்தில் பௌத்தம் தொடர்பில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் ஒப்பீடு செய்வதில் ஏதும் உள்நோக்கம் இருக்குமா என்ற வினாவிற்கு உடன் விடை தேட முடியாவிட்டாலும் அதனை இலங்கையின் யாழ்ப்பாணத்தில் ஆய்விற்கு உட்படுத்துவதில் எந்தளவிற்கு நன்மை உள்ளது என்பதை ஆய்வற்கு உட்படுத்த முடியும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது ஓர் நுண்கலை சார்பான ஒப்பீட்டு ஆய்வு என்றாலும், இதில் கணிசமான இஸ்லாமிய மாணவர்களும் பங்குகொண்டனர் என்பது கவனிக்கத்தக்கது.

இவற்றின் அடிப்படையில் இந்திய சீன வௌத்தம் தொடர்பான ஒப்பீடு என்பதை அயோத்தி பால இராமர் கோவில் பிரதிஸ்டை ஆகியவற்றின் ஒப்பீடாகவும் சிலர் பார்க்கின்றனர். அதிலும் குறிப்பாக அயோத்தியில் பால இராமர் கோவில் மதச் சடங்குகள் இடம்பெற்ற அன்று, இந்தியாவிலுள்ள சில பௌத்தர்கள், அயோத்தியில் உள்ள அந்த நிலம் பௌத்தர்களுக்கு சொந்தமானது, அந்த இடத்தில் பௌத்தச் சின்னங்கள் காணப்பட்டன என்றெல்லம் கூறி, அந்நாளை ஒரு கரிநாளாக தாங்கள் அனுசரிப்பதாகவும் அறிவித்திருந்தனர்.

இலங்கையில் இந்தியா போன்று முழுமையாக தீர்மானிக்கௌ ஓர் சக்தியாக வலுப்பெற்று காலூண்ற வேண்டும் என சகல வழிகளிலும் துடிக்கும் சீனா, அரசியல், பொருளாதார, இராஜதந்திர ரீதிகளில் பல முயற்சிகளையெல்லாம் முன்னெடுக்கின்றபோது பல இடங்ளில் தோல்விகளை சத்திப்பதற்கு இந்தியாவே காரண கர்த்தாவாக இருப்பது சீனாவிற்கு நன்கு தெரியும். குறிப்பாக தீவக மின்சார திட்டம், ஆய்வுக் கப்பலின் வருகை, பொருளாதார வலயம் என அப்பட்டியல் நீள்கிறது.

இவற்றின் காரணமாக, இலங்கையில் - அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதியல் - சீனா காலூண்றுவதற்கு, இந்திய நலனிற்கு எதிரான அல்லது போட்டியான விடயங்கள் ஊடாக முயலக்கூடாது என கடந்த ஆண்டு சீனாவின் பிரதிநிதிகளைச் சந்தித்த வடக்கைச் சேர்ந்த சிலர் கூறிய ஆலோசணையை பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே சீனாவின் முன்னெடுப்பில் இந்த இந்திய சீன பௌத்த ஒப்பீடு ஆய்வரங்கம் இருக்குமானால் இந்தியாவோடு தொடர்புபட்ட விடயங்களை முன்நகர்த்த சீனா நாடிபிடித்துப் பார்ப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

கல்வியின் பெயரால் இலங்கை - சீன நட்புறவு விடயங்கள் அடிப்படையிலான அம்சங்களை முன்நகர்த்தி அதன் ஊடாக சீனாவின் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கில் காலூ ண்றி தாங்கள் நினைத்ததை சாதிக்க முடியுமா என சீனா முயற்சிக்கின்றது.

அதேநேரம் இந்ந விடயத்திலும் இந்தியா வழமைபோன்று மௌனம் காத்தாலும் அதுதொடர்பில் ஆராயமல் விட்டுவிடும் என நம்பிவிட முடியாது. ஏனெனில் இந்த கருத்தரங்கு விடயம் ஏற்கனவே இந்தியாவின் காதிற்கும் விடயம் சென்றிருக்கும்.

இந்த நிலையிலேயே சீனா வடக்கில இன்னுமோர் விடயத்தில் கால் வைக்கவுள்ளது. அது முல்லைத்தீவை அடிப்படையாகக் கொண்டு மீன்பிடி துறை சார் முதலீட்டு வலயம் ஒன்று ஆரம்பிப்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் சீன நிறுவனம் ஒன்றுடன் விசேட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் பகிரங்க செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கள்ளப்பாடு கிராத்தில் அமையவுள்ள இந்த முதலீட்டு வலயத்திற்காக முதல் கட்டமாக 4 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன்படி வயலயம் அமையவுள்ளதாக கூறப்படும் கள்ளப்பாட்டில் கடந்த ஆண்டு 19 பேரிற்கு கடல் அட்டை பண்ணை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சீன முதலீட்ல் அமையவுள்ள மீன்பிடி முதலீட்டு வலயம் தொடர்பில் இன்றுவரை தமக்கு ஏதும் தெரியாது என மாவட்ட அரச நிர்வாகம் கையை விரிக்கின்றது.

முல்லைத்தீவில் சீனாவின் மீன்பிடி பொருளாதார வலயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அதே கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த, அமைச்சின் செயலாளர் மற்றும் இராஜாங்க அமைச்சரின் செயலாளர் ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நடைபெற்ற மற்றுமோர் கலந்துரையாடலில், விபத்தில் காலமான நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த அன்மையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இந்தியாவில் இருந்து இறால் குஞ்சுகளை இலங்கைக்கு கொண்டு வந்து அதனை பண்ணைகளில் வளர்த்து மீண்டும் ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களின் செயற்பாடுகளால் உள்ளூர் இறால் குஞ்சு உற்பத்தியாளர்கள் பாதிப்பை எதிர்கொள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவதானம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இப்படியான பின் புலங்களில் இலங்கையில் மீண்டும் இந்திய சீனாவின் பனிப்போர் குறைவின்றித் தொடர்கின்றது என்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசங்களே இந்தியாவின் பிராந்திய நலன்கள் மற்றும் பிரதேசத்தின் பாதுகாப்புகளுக்கு அரணாக உள்ளன என்று தமிழர் தரப்பு தொடர்பு கூறி வருகிறது.




கல்வி, கருத்தரங்கு, மீனவர்களுக்கு உதவி போன்ற போர்வைகளில் சீனா வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கால் பதிக்குமாயின் அது தமிழர் தாயகப் பகுதிகளின் பொருளாதாரத்தையும், வாழ்வியலையும் கடுமையாகப் பாதிக்கும் என்று துறைசார் வல்லுநர்கள் கவலை வெளியிடுகின்றனர். தமிழர் பகுதிகளில் சீனா கால் பதிக்கும் பட்சத்தில் அது மறைமுகமாக சிங்களக் குடியேற்றங்களுக்கு வழிவகுக்கும் என்றும், குடிபரம்பலை மாற்றியமைத்து தமிழர்களில் நிலையை மேலும் மோசமாக்கும் என்ற கவலைகளும் எழுந்துள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த கருத்தரங்கை இந்தியா கவனிக்காமல் இருந்திருக்க முடியாது. சீனா வடக்கில் கால் பதிக்க அதிதீவிர முயற்சிகளை எடுத்துவரும் நிலையில், இந்தியா என்ன செய்யப் போகிறது என்பதே மிகப்பெரும் கேள்வி.

# பிரபல இசையமைப்பாளர் இளையராஜாவின் புதல்வியும் பாடகியுமான பவதாரிணி இலங்கையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போது மரணத்தை தழுவினார்



பிரபல இசையமைப்பாளர் இளையராஜாவின் புதல்வியும் பாடகியுமான பவதாரிணி இலங்கையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போது மரணத்தை தழுவினார் இளையராஜாவின் புதல்வியும் பாடகியுமான பவதாரிணி காலமானார். புற்று நோயால் பாதிக்கப்பட்டு பவதாரிணி இலங்கையில் ஆயுர்வேத சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 25-01-2024 வியாழனன்று காலமானார். என்ற சோகமான செய்தியை உலகெங்கும் உள்ள எமது வாசகர்களுக்காக அறியத்தருகின்றோம்.

இசைஞானி இளையராஜவின் புதல்வி பவதாரிணி. கடந்த சில மாதங்களுக்கு முன்னால் கல்லீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பவதாரிணி ஆயுர்வேத சிகிச்சைக்காக இலங்கை சென்றார். இலங்கையில் ஆயுர்வேத சிகிச்சை எடுத்து வந்த பவதாரிணி, சிகிச்சை பலனிளிக்காமல் வியாழன் 25ம் திகதி மாலை 5.30 மணியளவில் உயிரிழந்துள்ளார். பவதாரிணிக்கு வயது 47. பவதாரிணியின் உடல் நாள சென்னைக்கு கொண்டு செல்லப்படும் எனக் கூறப்படுகிறது.

பிரபலமான பாடகியாகவும் திரைத்துறையில் பவதாரிணி வலம் வந்தார். இளையராஜா இசையமைத்த ராசய்யா படத்தில் முதன் முதலாக பாடல் பாடினார். பாரதி பாடத்தில் மயில் போல பொண்ணு என்ற பாடலை பாடியதற்காக பவதாரிணிக்கு தேசிய விருது கிடைத்தது. இதேபோல் நடிகர் விஜயின் காதலுக்கு மரியாதை, ப்ரண்ட்ஸ் படத்தில் பாடல்களை பாடியுள்ளார். காதலுக்கு மரியாதை படத்தில் இது சங்கீத திருநாளோ என்ற பாடலை பாடியுள்ளார்.

காற்றில் வரும் கீதமே, ஒளியிலே தெரிவது தேவதையா போன்ற பாடல்களையும் பவதாரிணி பாடியுள்ளார். இராமன் அப்துல்லா படத்தில் என் வீட்டுச் சன்னல் என்ற பாடலையும் தாமிரபரணி படத்தில் தாலியே தேவை இல்லை உள்ளிட்ட பல பாடல்களை பவதாரிணி பாடியுள்ளார். தாமிரபரணி படத்தில் பாடிய தாலியே தேவை இல்லை என்ற பாடல் பட்டி தொட்டியெங்கும் பிரபலமானது. பின்னணி பாடகியாக மட்டும் இன்றி 10க்கும் மேற்பட்ட படங்களில் பவதாரிணி இசைமையத்துள்ளர். தனது சகோதரர்கள் கார்த்திக் ராஜா, யுவன் சங்கர் ராஜா இசையிலும் ஏராளமான பாடல்களை பாடியுள்ளார். தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னட மொழி திரைப்படங்களுக்கும் இசையமைத்துள்ளார். இசைஞானி இளையராஜாவின் மகள் பவதாரிணி உயிரிழந்த செய்தி அவரது ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



சமூக வலைத்தளங்களில் இளையராஜாவின் ரசிகர்கள் பலரும் அவருக்கு ஆறுதல் தெரிவிக்கும் விதமாக கருத்துக்களை பதிவிட்டு வருகிறார்கள். அதேபோல், இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களும் பவதாரிணி மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து வருகின்றனர். இளையராஜாவின் புதல்வி பவதாரிணியின் மகள் மறைந்த செய்தி அறிந்து தமிழ்த் திரைத்துறையினரும் சோகத்தில் மூழ்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# UN Experts Call Upon Sri Lanka to "Immediately Suspend" it's 'Yukthiya' Operation

- Siva Parameswaran

Top experts of the UN Human Rights body led by senior international Human Rights Attorney Priya Gopalan has called upon the Ranil Wickeremesinghe government to immediately suspend and review so-called Operation 'Yukthiya' - which is dubbed as a war against drugs.

Apart from calling for an immediate suspension of the operations the experts have asked the Sri Lankan government to focus on policies based on health and human rights.

"Drug users have human rights" the experts emphasized.

Adding further they said, "They deserve to live a life with dignity without facing further discrimination and stigmatization".

The nationwide crackdown by the controversial Public Security Minister Tiran Alles and his acting police chief Deshabandhu Tennakone has come in for sharp criticism and condemnation from local and international bodies.

UN experts Priya Gopalan (Chair-Rapporteur), Matthew Gillbett (Vice-Chair on Communications), Miriam Estrada-Castillo and Mumba Malila, Working Group on arbitrary detention, Margaret Satterthwaite, Special Rapporteur on the Independence of Judges and Lawyers; Tlaleng Mofokeng, Special Rapporteur on the right of everyone to the enjoyment of the highest attainable standard of physical and mental health have deplored reported cases of arbitrary arrests of thousands of drug offenders from marginalized soci0-economic groups, and the detention of hundreds in compulsory military-run rehabilitation centres.

Torture and ill-treatment were also reported during the security operation known as 'Yukthiya' they said.

"The current context of severe repression against suspected drug offenders id deeply worrying" the experts added.

The said to be war against drugs has become infamous for its grave human rights violations by the state security agencies. Arbitrary arrests, inhuman treatments have become part of this nationwide crackdown on narcotics.

'Operation Yukthiya' is jointly implemented by Sri Lanka Police-whose acting chief Deshabandhu Tennekon is accused of gross human rights violations and have been indicted by the court-and the Ministry of Public Security.

As part of the crackdown more than 20,000 suspects have been arrested and subjected to torture, cruel, inhuman or degrading treatment according to the complaints received by the Human Rights Commission of Sri Lanka (HRCSL).

"The operation has accordingly become associated with reports of widespread injustice, making its very title 'Yukthiya' (the Sinhala term for 'justice') a misnomer".

The Bar Association of Sri Lanka too has raised serious concerns with regard to the operation. HRCSL has emphasized the rule of law has to be respected and constitutional guarantees are ensured.

"The Commission reiterates that every person in Sri Lanka has a fundamental right to be free from torture, or cruel, inhuman, or degrading treatment or punishment under Article 11 of the Sri Lankan Constitution. This right is absolute and inalienable and may not be restricted under any circumstances".

Expressing similar sentiments, the UN experts stressed that rehabilitation must be conducted from a harm reduction perspective, respecting the autonomy and informed consent of drug users, including the right to refuse medication.

"Compulsory rehabilitation centres should be closed immediately and replaced by voluntary, evidence-based, rights-based and community-based social services," said the experts, who stand ready to provide technical cooperation.

They urged Sri Lankan authorities to investigate thoroughly and impartially any allegations of torture, ill-treatment and denial of due process and fair trial rights.

"Irregularities in the judicial process of sending people to rehabilitations centres should also be investigated," the experts said.

They called on the Government to review its current legislation on drug offences and to end the involvement of armed forces in drug control and treatment activities, in line with international human rights law and standards.

Apart from calling upon the government to suspend its 'Yukthiya' operation the experts had already written to the government last year raising their concerns about Sri Lanka's legislation on the treatment of suspected drug offenders.




# கடந்தவையும் கடப்பவையும்

(86)

கந்தனின் சந்நிதியில் இருந்தவாறே
முன்னைய நாட்களை நினைத்தபோது

கண்கள் பனிக்கவே கண்ணீரும் வந்தது - ஆனாலும்
எந்தவொரு நினைவுமே இல்லாது

வந்தவேலை முடிந்ததென்று வாகனத்தை தேடுபவர்
- தம்
சொந்தவூர் திரும்புவதே கதையாக

'இந்தநேரம் வெளிக்கிட்டால் அலங்காரக்
கந்தனிடம் கணக்காகச் சென்றிடலாம்' -
என்றபோதும்

ஏறாத காதாக மாயவனை நினைத்தபடி
நாளைய நிகழ்ச்சியை நாசூக்காய் சொல்லிடவே

வேகமாய் வந்தவண்டி வீடுவந்து சேருதற்குள் -
நாளை
போகலாம் என்பதுவும் முடிவாச்சு - நாளைய

பொங்கலுக்கு தேவையான பொருட்கள் வாங்க -
இப்போ
எங்குமே போவதற்குத் தேவையில்லை

அலைபேசி அழைப்பு ஒன்றே போதும்
தொலைதூரக் கடைகூட வீடுவரும்

அப்படியே வந்தது அத்தனையும் வீடுதேடி
எப்படி இருந்தபோதும் மாயவனை பார்ப்பதற்கு?

வல்லிபுரக் கோவிலுக்கு சென்றுதான் ஆகவேண்டும் -
அன்று
நெல்லியடிக்கு அங்காலை கொஞ்சநேரக் காத்திருப்பு

சொல்லிய இடத்திற்கு சொந்தம் வந்து சேரும்வரை -
வண்டிக்குள்
சொல்லிக்கொண்டு இருந்ததுதான் இந்தக்கதை

தட்டச்சுப் பயிற்சிக்காய் பலநாட்கள்
தன்னந்தனியாக வந்தபோதும்

புவனம்ரீச்சரிடம் நடனம் பழக வந்தபோதும் - மிக
கவனமாய் வந்துபோன நாட்கள் அவை - அன்று

தாழப்பறந்து ஆளைத்தேடும் உலங்குவானூர்தி
காதடைக்க வட்டமிடும் - சிலசமயம்

ஆட்டிறிக் குண்டுகளை அவிழ்த்துவிடும் - அது
எந்த இடத்தில் விழுமென்று தெரியாது

நின்ற இடத்துக் கட்டடத்தை சுற்றிய நாட்களும்
என்றுமே மறக்கவொண்ணா நாட்கள்தான்
எம்மவர்க்கு - இன்று

நேர்த்தியான பாதைகளில் இளைஞர்களும்
யுவதிகளும்
பார்ப்பதற்கு அழகாகத் திரிகிறார்கள்

அன்றிருந்த அவர்கள் ஊரின் அவலநிலை
கொஞ்சமேனும் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கோ
தெரியாது

இரண்டாயிரத்தின் பின் பிறந்த இவர்களுக்கு - அந்த
இருண்டகாலம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை

இந்த ஊரும் முழு இருட்டில் இருந்தகாலம் -
அமைதிக்காய்
வந்தவர்கள் தந்தது இரவுநேர முழு ஊரடங்கு -
அன்று

நிலவுக்கும் நாய்களுக்கும் மாத்திரமே சுதந்திரம்
சிலசமயம் நாய்களும் கூடப் பாவம்தான்

இரவுநேரம் பாதுகாப்பு உலாப்போகும் காலமது
நிலத்தில் அகலக்குழி தோண்டி மறைந்திருந்து

ஆட்பிடிக்கும் புதுயவுத்தி கைகொடுத்த காலமும்தான்
- பல
நாட்கள் நீடிக்கவில்லை ஆனாலும் நடந்ததாக
அறிந்ததுண்டு - இங்கு

இவர்கள் காலம் இருண்ட காலம் - முன்னிருந்த
அவர்கள் காலம் இரத்தம் படிந்த காலம்

படிக்கப்போன மாணவனும் சிங்கத்தின்
வாள்களுக்குள் சிக்குண்டு
துடிக்கத்துடிக்க உயிர் துறந்த காலம்

இப்படித்தான்இருக்கும் இந்திரலோகம் என
கற்பனையாய் ஒரு உலகை காட்டுவது இலக்கியம் -
இங்கு

அப்படித்தான் மாறுமோ என்பதாக இன்று அழகிய
மாறுதல்கள் - இது
எப்படித்தான் மாறினாலும் மாறவாது கடந்தகால
நிகழ்வுகள்

(தொடரும்)

- உமா மோகன் -
மொன்றியால் - கனடா

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் விபத்து – ஒருவர் பலியானதுடன் 8 பேர் படுகாயம்!

புு. கஜிந்தன்

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானதுடன் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த அரச பேருந்துடன், கொழும்பியிருந்து யாழ்ப்பாணம் நோக்கி எதிரே பயணித்த வான் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பேருந்து விதியில் பயணித்த மாடுகளுடன் மோதிய பின் வானுடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வவுனியாவை சேர்ந்த 50 வயதுடைய திருமணி திருச்செல்வம் எனும் பெண் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். காயமடைந்தவர்களில் ஐவர் தீவிர சிகிச்சைப்பிரிவில் தொடர்ந்தும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றனர்.




இதேவேளை, குறித்த விபத்தில் 8 மாடுகளும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இணுவையூர் கந்தசாமி ஆலயத்தில் இன்று பால்குட பவனி

இந்துமக்களால் அனுஸ்டிக்கப்படும் மிக முக்கிய விரதங்களின் ஒன்றான தைப்பூச உற்சவத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் விஷேட அபிஷேக, ஆராதனைகள் இடம்பெற்றன.

இதனை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவையூர் கந்தசாமி ஆலயத்தில் பால்குடபவனி யாழ்ப்பாணம் - மருதனார் மட சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் இணுவையூர் கந்தசாமி தேவஸ்தானம் வரை சென்றடைந்தது நிறைவடைந்தது.




இதனை தொடர்ந்து இணுவையூர் கந்தசாமி ஆலயத்தில் இணுவையூர் கந்தசாமிக்கு பால் அபிஷேசகம் உற்சவம் இடம்பெற்றது.

இதில் நூறுக்கு மேற்பட்ட பெண்களால், பக்தர்கள், பால் குடம் எடுத்து வந்து அபிஷேகம் செய்து முருகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

அத்துடன் இந்த ஆலயத்தில் உலக பெரும் மஞ்சப்பெருவிழா இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.





# யாழ்ப்பாணபிரதேச விவசாயிகள் தைப்பூசத்தினை முன்னிட்டு பாரம்பரிய முறைப்படி வயலில் புதிர் எடுக்கும் சம்பரதாய நிகழ்வுகள்

தைப்பூசத்தினை முன்னிட்டு பாரம்பரிய முறைப்படி வயலில் புதிர் எடுக்கும் சம்பரதாய நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சங்குவேலி வயலில் விளைந்திருந்த நெற் கதிகதிர் களை அப்பிரதேச விவசாயிகள் பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டியில் சென்று சூரியனுக்கு வணக்கம் தெரிவித்து நெல்லினை அறுவடை செய்தனர்.

அவற்றினை தலையில் சுமந்துசென்று மாட்டுவண்டியில் ஏற்றி பாரம்பரிய முறைப்படி உடுவில், மருனார்மடம் ஊடாக இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு காணிக்கையாக வழங்கினர்.







# "தமிழரசுகட்சி, திரு.சுமந்திரனை தலைமைப் பதவிக்கான தேர்தலில் தோற்கடித்ததை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். எனினும், அவரை தமிழ் அரசியலில் இருந்தும் முற்றாக அகற்றுவதும் இன்றியமையாதது."

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்படோரின் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவிப்பு

"தமிழரசுகட்சி, திரு. சுமந்திரனை தலைமைப் பதவிக்கான தேர்தலில் தோற்கடிக்கச் செய்ததை அறிந்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எனினும், அவரை தமிழ் அரசியலில் இருந்து முற்றாக அகற்றுவதும் இன்றியமையாதது. அவர் தமிழினத்திற்கு ஒரு அச்சுறுத்தல் நிறைந்தவர். மற்றும் நமது சுதந்திரத்திற்கு தடையாக செயல்படுகிறார்.

திரு. சிறிதரன் பெற்ற வாக்குகள் சுமந்திரனுக்கு எதிரானவர்களிடமிருந்தே வந்துள்ளன, ஆனால் அவை அவருடைய அடிப்படை ஆதரவைப் பிரதிபதிக்கவில்லை என்பதை புதிய தலைவர் அறிந்திருக்க வேண்டும். திரு. சிறிதரன் பொதுவாக்கெடுப்புக்கு வாதிட வேண்டும் மற்றும் இலங்கையுடனான எந்தவொரு பேச்சுவார்த்தைகளிலும் மூன்றாம் தரப்பினரின் தலையீட்டைக் கோர வேண்டும்.

இவ்வாறு வவுனியா நகரில் தங்கள் அலுவலகத்தை நிறுவி அங்கு கடந்த பல ஆண்டுகளாக காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்காக கண்ணீரும் கம்பலையுமாக குரல் கொடுத்து வரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்படோரின் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் கோ.ராஜ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

"காணாமல் ஆக்கப்பட்ட நமது அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிப்பதில் நமது முயற்சிகளை வலுப்படுத்துவதே எங்கள் அர்ப்பணிப்பாகும், மேலும் நமது தைரியத்தின் ஆதாரம் நமது இறையாண்மையில் உள்ளது.

இந்தச் சாவடியில் எங்களின் ஏழாவது ஆண்டு கடினமான பணி இன்றுடன் நிறைவு பெற்று 8வது ஆண்டை தொடர்கிறது. நமது இறுதி இலக்கான இறையாண்மையை அடைவதற்கு இடைவிடாமல் பாடுபடும்போது நமது உறுதி அசையாது. காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ்ப் பிள்ளைகளின் இருப்பிடம் தொடர்பில் விசாரணை செய்வதற்குத் தேவையான அதிகாரத்தை இதன் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

நாங்கள் எங்கள் பிரச்சாரத்தை பல நாடுகளுக்கு விரிவுபடுத்துகிறோம், மேலும் போராடும் தமிழர்களின் சார்பாக வாதிடுவதற்கு ஐரோப்பா மற்றும் பிற பிராந்தியங்களுக்குச் செல்ல விரும்பும் நபர்களைத் நாடி வருகிறோம்.

எங்கள் வெளிநாட்டுக் குழுவின் பிரச்சாரத்திற்கு ஆதரவளிப்பதில் பல பொறுப்பை ஏற்க அனைத்து நாடுகளிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். இந்த ஆதரவு, வாக்கெடுப்பு தொடர்பான நமது பார்வையை திறம்பட வாதிட எங்களுக்கு அதிகாரம் அளிக்கும்.

தமிழர் விடுதலையை நசுக்குவதை ஆதரிக்கக் கூடாது என்று வலியுறுத்தி சுவிட்சர்லாந்து அதிபருக்கு கடிதம் எழுதினோம். அதற்குப் பதிலாக, ஜனநாயகக் கருவியான வாக்கெடுப்பைப் பயன்படுத்துவதற்கு அவர்களின் ஆதரவைக் கேட்டோம்.

இதே நடவடிக்கையை ஜப்பான் பிரதமரிடமும் கோர திட்டமிட்டுள்ளோம். இந்த வாரத்தில் அவருக்கு ஒரு கடிதம் அனுப்பப்படும்.

எங்கள் வாக்கெடுப்புக்கு ஆதரவைப் பெற அமெரிக்க வெள்ளை மாளிகையுடன் தொடர்பு கொள்வோம்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் "இமாலய பிரகடனத்தை" ஏற்றுக்கொண்டமைக்கும் எமது வருத்தத்தைத் தெரிவிக்க விரும்புகிறோம். இந்த அறிவிப்பு பைடனின் நிகழ்கால மற்றும் கடந்த கால வெளியுறவுக் கொள்கைக்கு முரணானது.



ஒவ்வொரு அமெரிக்க தூதரும் மற்றும் புதிய அமெரிக்க அரசுத் துறை அதிகாரிகளும் "அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை" என்ற கொள்கையின் அடிப்படையில் தங்கள் சிந்தனையை முயற்சி செய்கிறார்கள், ஆனால் அது செயல்படவில்லை. அது வேலை செய்யாது என்பதை அவர்கள் உணரும் போது, அவர்கள் தங்கள் பதவி நிலையை விட்டு வெளியேறு வருகின்றது.

ஒரு நேர்காணலின் போது, தூதர் பிளேக் ராஜபக்ச அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து இரண்டு மாறுபட்ட அறிக்கைகளை வழங்கினார். ஆரம்பத்தில், பிரிவினைவாதப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு கால அவகாசம் தேவை என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். எவ்வாறாயினும், நீதி, மனித உரிமைகள் மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் ராஜபக்ச அரசாங்கம் தன்னிடம் நேர்மையற்ற முறையில் நடந்துகொண்டது என்பதை உணர்ந்து கொண்டதாக அவர் பின்னர் ஒப்புக்கொண்டார்.

போஸ்னியா, கொசோவோ, ஈராக், மத்திய கிழக்கு மற்றும் உக்ரைன் மீதான ஜனாதிபதி பைடனின் கடந்த கால மற்றும் தற்போதைய கொள்கைகளை தூதுவர் ஜூலி சுங்கிற்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். இந்தக் கொள்கைகள், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கண்காணிக்கப்படும் சர்வதேச எல்லைகள் மூலம், அவர்களின் இருப்பு பாதுகாப்பு மற்றும் அமைதியினை அளித்துள்ளன.

தமிழரசுகட்சி, திரு. சுமந்திரனை தலைமைப் பதவியிலிருந்து நீக்கியிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எனினும், அவரை தமிழ் அரசியலில் இருந்து அகற்றுவதும் இன்றியமையாதது. அவர் தமிழினத்திற்கு ஒரு அச்சுறுத்தல் மற்றும் நமது சுதந்திரத்திற்கு தடையாக செயல்படுகிறார்.

திரு. சிறிதரன் பெற்ற வாக்குகள் சுமந்திரனுக்கு எதிரானவர்களிடமிருந்தே வந்துள்ளன, ஆனால் அவை அவருடைய அடிப்படை ஆதரவைப் பிரதிபதிக்கவில்லை என்பதை புதிய தலைவர் அறிந்திருக்க வேண்டும். திரு. சிறிதரன் பொதுவாக்கெடுப்புக்கு வாதிட வேண்டும் மற்றும் இலங்கையுடனான எந்தவொரு பேச்சுவார்த்தைகளிலும் மூன்றாம் தரப்பினரின் தலையீட்டைக் கோர வேண்டும்.

நமது தொடர் போராட்டத்தின் 7வது ஆண்டு நினைவேந்தலில், வரும் ஆண்டிற்கான நம்பிக்கையை நிலைநிறுத்துவோம். இந்தப் பயணத்தில் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் பங்களித்து எம்முடன் இணைந்து கொள்ள வேண்டும்."

இவ்வாறு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்படோரின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் நீர் வழங்கல் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த விபத்தில் பலி!

(25-01-2024)

கட்டுநாயக்க அதிவேக வீதியில் 25-01-2024 அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையின் நீர் வழங்கல் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.



கட்டுநாயக்காவில் இருந்து கொழும்பு நோக்கி இராஜாங்க அமைச்சர் பயணித்த சொகுசு வாகனம், அதே திசையில் சென்ற கொள்கலன் லொறி ஒன்றின் பின் பகுதியில் மோதியுள்ளது.

பின்னர், பாதுகாப்பு வேலியில் வாகனம் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இராஜாங்க அமைச்சர், அவரது பாதுகாப்பு அதிகாரி மற்றும் வாகனத்தின் சாரதி ஆகியோர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



அங்கு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அதிகாரி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

25-01-2024 அதிகாலை 2 மணியளவில் கட்டுநாயக்க அதிவேக வீதியின் R 11.1 கிலோமீட்டர் கம்பத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஜயகொடி என்ற பாதுகாப்பு அதிகாரியே இதன்போது உயிரிழந்தவராவார்.

காயமடைந்த வாகன சாரதி ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் விபத்து தொடர்பாக கந்தானை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு ஜனாதிபதியும், நிராகரிக்கப்பட்ட அமைச்சரும், இந்த சபையும், மக்களின் உண்மையான கருத்துக்களை வெளிவராமல் தடுக்க முயற்சிக்கின்றது

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய நாடாளுமன்ற உரை

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் கொண்டுவரப்படவுள்ள நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சம்பந்தமாக விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்று நாடாளுமன்றில் ஆற்றிய உரை.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சம்பந்தமாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விவாதம் தொடர்பாக நிலையியற் கட்டளை 50.2 சரத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

அதில், இந்த நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படுவதாக இருந்தால் அந்த மாற்றங்கள் துறைசார் மேற்பார்வை குழுவுக்கு அனுப்பப்பட்டு அந்த குழு அந்த மாற்றங்களை சரியாக ஆய்வு செய்து அதுதொடர்பாக ஒரு அறிக்கை தாயாரிக்கப்பட்டு அந்த அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் அந்த அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற வரைக்கும் அந்த சட்டமூலம் தொடர்பாக வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்றும் சொல்லப்பட்டுள்ளது. அந்த அறிக்கை என்னும் பெயரில் பாராளுமன்றத்துக்கு சமர்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. அந்த ஆவணம் அறிக்கை அல்ல என்றும் அந்த அறிக்கை 23ம் திகதி ஜனவரி மாதம் 2024 இல் சமர்ப்பிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்று குறிப்பிட்ட அறிக்கை இதுவரைக்கும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் படாத நிலையில் தான் இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

வரப்போகும் உண்மையான சட்டத்தில் இருக்கப்போகும் விடயங்கள் எல்லாமே மூடி மறைக்கப்பட்டு ஒரு இருண்ட நிலையில் தான் இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த விவாதம் நடைபெறும் விடயங்கள் தொடர்பான் 56 சரத்துக்களின் 34 சரத்துக்கள் திருத்தப்படவேண்டும் என்று உயர் நீதிமன்ற வழக்குகள் மூலம் சொல்லப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினுடைய அமைச்சரே நியமித்த நிபுணர்கள் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் மேலதிகமான சரத்துக்களும் திருத்தப்பட்டு 42 சரத்துக்கள் இந்த சட்டமூலத்தில் திருத்தப்பட வேண்டிய நிலையில், அந்தத் திருத்தங்கள் செய்யப்படாமலயே இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

உலகத்தில் மிகமும் மதிக்கப்படுகின்ற ரெக் அமைப்புகளுடைய கூட்டான ஆசிய இணைய குழு சிங்கப்பூரில் உள்ளது.

இந்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் அமைச்சர் குறிப்பிடும் போது - ரெக் அமைப்பினுடைய அனுசரணையோடு தான் இந்த சட்டமூலம் இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். அவரது அந்தக் கருத்துக்கு ரெக் அமைப்பு அறிக்கை ஒன்றை விட்டிருக்கிறது.

இந்த சட்டமூலம் இப்போது இருக்கும் வடிவத்தில் நிறைவேற்றப்பட்டால் அது பாரிய அளவுக்கு ரெக் அமைப்புக்கள் இலங்கையில் தொடர்பு வைத்திருப்பதைத் தடுக்கும் என்றும், இவ்விடயம் கடும் எதிர்ப்பை உருவாக்கும் என்றும் தமது அமைப்பு சமர்ப்பித்த மாற்றங்கள் அனைத்தையும் உள்வாங்கினால் மட்டுமே சர்வதேச மட்டத்தில் இந்த சட்டமூலம் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், இப்போதைக்கு இருக்கக் கூடிய சட்டமூலத்தை தாங்கள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என்றும் அந்த அறிக்கை மூலம் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.

அப்படியாயின், ஏற்கனவே 56 சரத்துக்களில் 42 சரத்துக்களை திருத்த வேண்டும் என்ற நிலை இருக்கையில் அதுவும் அமைச்சரே இந்த ரெக் அமைப்பினுடைய குழு வழங்கிய திருத்தங்கள் பெறுமதியானவை என்றும், அந்த சட்டமூலங்கள் எதிர்காலத்தில் திருத்தங்கள் ஊடாகக் கொண்டு வரப்படும் என்றும் தனது உரையில் சொல்லியிருக்கும் நிலையில்,

இதில் பாரிய குறைபாடுகள் உள்ளது என்பதையும் அமைச்சரே ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையில் தான், இந்த சட்டமூலம் குறைபாடுடைய சட்டமூலம் என்று அவரே இந்தத் திருத்தங்களைப் பற்றிப் பேசுகிறார்.



அப்படியாயின் இந்த சட்டமூலத்தில் பாரிய குறைபாடுகள் இருக்க இந்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு என்ன அவசரம் ஏற்பட்டுள்ளது? என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

ஏற்கனவே சர்வதேச மட்டத்தில் உதவியை கேட்டுக் கொண்டிருக்கும் சிறிலங்காவுக்கு, அந்த சர்வதேச அமைப்புக்களினுடைய உதவிகள் வராமல் பண்ணுவதற்கு வழியேற்படுத்தப்போகின்ற ஆபத்துக்கள் உள்ள நிலையிலும்,

இந்த சட்ட மூலத்தை அவசரஅவசரமாக ஏன் நிறைவேற்றுகின்றீர்கள் என்றால் - இது பாரதூரமான ஜனநாயகத்தை மறுக்கக் கூடிய சட்டமூலம் என்று விமர்சனங்கள் இருக்கக் கூடியதாகவே அவசரமாகவே நிறைவேற்றுவதற்கு நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், அதற்கு காரணம் - நீங்கள் அந்த பாரதூரமான ஜனநாயக விரோத செயல்பாடுகளை செயற்படுத்துகின்ற சட்டத்தை தான் நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதேயாகும்.

அப்படிப்பட்ட சட்டமூலத்தைக் கொண்டு வந்தால் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு ஜனாதிபதியும், மக்களால் நிராகரிக்கப்பட்ட அமைச்சரும், மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள இந்த சபையும், மக்களின் உண்மையான கருத்துக்களை வெளிவராமல் தடுத்து - உண்மையான விவாதங்கள் நடத்துவதற்கு அனுமதிக்காமல் இறுக்கி - அடுத்த தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு நினைக்கிறார்கள்.

அப்படிப்பட்ட இருண்ட யுகத்தை உருவாக்கி அடுத்த தேர்தலுக்கு முகங்கொடுத்தால் தாங்கள் வெல்லலாம் என்று கருதுகிறீர்கள்.

ஆனால் - அது நிச்சயமாக நடக்காது.

ஒரு ஆய்வு மையம் நடத்திய ஒரு கூட்டத்துக்கு நான் சென்றிருந்தேன். அங்கே அரச தரப்பின் முக்கியஸ்தர்களும், எதிர்கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கூட வந்திருந்தனர்.

அங்கே நாட்டு மக்கள் மிகப் பெருமளவில் மதிக்கின்ற கல்விமான்கள் அதில் பங்கேற்றிருந்தனர். அந்த சிவில் சமூகத் தலைவர்கள் எக்காரணம் கொண்டும், தீவிரவாதப் போக்குடையவர்களோ அல்லது பொறுப்பற்றவர்களோ அல்லது குழப்பவாதிகளோ என்று சொல்லக்கூடியவர்கள் அல்ல. மாறாக - மிக நிதானமாகவே தமது கருத்துக்களை தெரிவிப்பவர்கள்.

எக்காரணம் கொண்டும் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தும் விதமாக செயற்படுபவர்கள் அல்ல. எக்காரணம் கொண்டும் தேர்தல் அரசியலிலோ கட்சி அரசியலிலோ ஈடுபடுபவர்களும் அல்ல. அப்படிப்பட்டவர்களே - இன்றைக்கு இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தை திட்டமிட்டு மறுதலிக்கின்ற மற்றும் இல்லாமல் செய்கின்ற செயற்பாடுகள் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள். அதனுடைய முக்கியமான விடயமாகவே இந்த நிகழ்நிலைக் காப்பு சட்டமூலமும் அமைந்துள்ளது என்று தெரிவிக்கிறார்கள்.

ஆகவே - இவ்வளவு தூரத்துக்கு கண்டனங்கள் உள்ள நிலையில், சர்வதேச சமூகத்தின் உதவிகள் தேடிக்கொண்டிருக்கும் நிலையில், அதே சர்வதேச சமூகத்தைப் பகைக்கின்ற வகையில் இந்த சட்டமூலத்தை திருத்தாமல் நிறைவேற்றுவது அனைத்துமே - இந்த அரசாங்கம் தன்னுடைய இருப்பையும் தன்னுடைய நலன்களையும் மட்டுமே பார்க்கிறதேயொழிய, மக்களின்பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் கொண்டுவரப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சம்பந்தமாக விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்று நாடாளுமன்றில் ஆற்றிய உரை.

# வெலிகந்தை கந்தகாட்டு புனர்வாழ்வு நிலையத்தில் 50 கைதிகள் தப்பி ஓட்டம்

**(கனகராசா சரவணன்)**




வெலிகந்தை கந்தகாட்டு புனர்வாழ்வு நிலையத்தில் மீண்டும் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து அங்கிருந்து 50 கைதிகள் புதன்கிழமை (24) இரவு தப்பி ஓடியுள்ளதாகவும் அவர்களை தேடும் நடவடிக்கையினை பொலிசார் இராணுவத்தினருடன் இணைந்து தேடும் நடவடிக்கையினை முன்னெடுத்துவருவதாக வெலிகந்தை பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த புனர்வாழ்வு நிலையத்தில் சம்பவதினமான இரு கைதிகளுக்குள் ஏற்பட்ட சண்டையில் இருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு மீண்டும் புனர்வாழ்வு நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டனர்.

இந்த நிலையில் அங்கு மீண்டும் இரவு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் கைதிகளுக்கிடையே மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை போன்ற பிரதேசவாதத்தின் அடிப்படையில் கலகம் ஏற்பட்ட நிலையில் அங்கிருந்து பாதுகாப்பு வேலியை உடைத்து 50 பேர்வரை தப்பி ஓடியுள்ளனர்.

இவ்வாறு தப்பி ஓடியவர்கள் அந்த பகுதி காட்டில் தலைமறைவாகியுள்ள தையடுத்து அந்தபகுதியை பொலிசார் இராணுவத்துடன் இணைந்து சுற்றிவளைத்து தேடும் நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை மதுபோதைக்கு அடிமையாகிய்ய சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களை புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவருவதுடன் அவர்களுக்குள்ளே பிரதேசவாத சண்டை, வழங்கப்படும் உணவு உட்பட பல காரணங்களை முன்வைத்து கைதிகளுக்கிடையே சண்டை ஏற்பட்டு அங்கிருந்து பாதுகாப்பு வேலியை உடைத்து தப்பி ஓடும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பயங்கரவா தடை சட்டத்தில் கைது செய்யப்பட்ட ஜனநாயக போராளிகள் கட்சி உப தலைவர் நகுலேஸ் 60 நாளின் பின் பிணையில் விடுவிப்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட ஜனநாயகப் போராளிகள் கட்சி உப தலைவர் என். நகுலேஸ் செவ்வாய்க்கிழமை (23) களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் பிணையில் விடுதலை செய்தார்.

கடந்த வருடம் நவம்பர் 25ம் திகதி வெல்லாவெளி பிரதேசத்திலுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி காரியாலயத்தில் மாவீரர் பெற்றோரகளை கௌரவிக்கும் நிகழ்வு மேற்கொண்ட நிலையில் பொலிசாரால் கட்சி உப தலைவர் என்.நகுலேஸ் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்து நீதிமன்ற விளக்கமறியலில் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நிலையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய அவரை 60 நாளின் பின்னர் பிணையில் விடுவித்தார்.



# இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனுக்கு மன்னாரில் அமோக வரவேற்பு

**- மன்னார் நிருபர் (25-1-2024)**

இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் அவர்களை வரவேற்கும் நிகழ்வு வியாழக்கிழமை (25) மாலை 4.30 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது வியாழக்கிழமை (25) மாலை மன்னார் நகர வந்தடைந்த இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மன்னார் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்தார்.


அதனைத் தொடர்ந்து மன்னார் ஆத்தூர் பிரதான வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட கிளைக்கு மோட்டார் சைக்கிள் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார்.

குறித்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன், பா. அரியநேந்திரன், சிறிநேசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட முக்கியஸ்தர்கள், இளைஞர் அணியினர் ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.








# பாகிஸ்தான் நாட்டுப் பிரஜை ஒருவர் யாழ்ப்பாணத்தில் கைது — ஒருவர்தப்பி ஓட்டம்

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த பிரஜை ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் புதன்கிழமை கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீ-தியில் அமைந்துள்ள கடை ஒன்றில் பொருட்கள் கொள்வனவு செய்துள்ளார்.

குறித்த பொருட்களுக்கான பணத்தை செலுத்த முற்பட்ட சமயம் சந்தேகம் ஏற்பட நிலையில் விசாரணை செய்ய முற்பட்ட வேளை அவருடன் வருகைதந்த சக பாகிஸ்தான் பிரஜை ஓடியுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் குறித்த சந்தேக நபரான பாகிஸ்தான் நாட்டுப் பிரஜை பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் தான் பாகிஸ்தான் நாட்டில் இருந்து இலங்கை வந்ததாகவும் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மித்த பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருப்பதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தப்பி ஓடி பாகிஸ்தான் பிரஜை தொடர்பில் தகவல் வெளியாகவில்லை.




கனடிய செய்திகள்
Canadian News

# உரும்பிராய் இந்து பழைய மாணவர் சங்கம் — கனடா நடத்திய 30வது பொங்கல் விழாவில் தொழிலதிபர் சாந்தா பஞ்சலிங்கத்தின் பன்முகப் பங்களிப்புக்களுக்கு பாராட்டு

உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா, தங்களது 30வது ஆண்டு பொங்கல் விழாவை கடந்த 20-01-2024 சனிக்கிழமை அன்று ஸ்காபறோ மாநகரில் அமைந்துள்ள தமிழ் இசைக் கலாமன்ற அரங்கில் வெகு சிறப்பாகக் கொண்டாடியது. சிறப்புப் பேச்சாளராக பட்டிமன்ற நட்சத்திரப் பேச்சாளர் திரு. மோகனசுந்தரம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேற்படி விழாவில் தொழிலதிபர் சாந்தா பஞ்சலிங்கம் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராக இருந்தாலும் உரும்பிராயில் உள்ள பல பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உதவிகளை வழங்கியதோடு கனடாவிலும் பல அமைப்புக்களின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார் என்பதை பலர் சுட்டிக் காட்டினார்கள்.

மங்கல விளக்கு பிரதம விருந்தினர்கான திரு.திருமதி. சாந்தலிங்கம், பவளமலர் மற்றும் திரு.திருமதி. கதிர்காமநாதன் தையல்நாயகி ஆகியோரால் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பெற்றன. தமிழ்த்தாய் வாழ்த்தைத் தொடர்ந்து கனடிய தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டது. மௌன அஞ்சலியைத் தொடர்ந்து "கவியாலயா நடனப்பள்ளி" மாணவிகளின் சிறப்பான வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

அடுத்த நிகழ்வாக சங்கத்தினால் நடத்தப்பெற்ற கணிதம், மற்றும் ஆங்கிலப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான முதலாவது பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வயலின், மிருதங்கம், கஞ்சிரா ஆகிய வாத்தியங்கள் இணைந்த இனிமையான வாத்தியக் கச்சேரி ஒன்று நடைபெற்றது. தொடர்ந்து 2வது பரிசளிப்பு விழா இடம் பெற்றது. தலைவர் உரையை திரு. ஜெயமுகுந்தன் ஜெயரட்ணமும், பிரதம விருந்தினர் உரையை திரு. சாந்தலிங்கம் பஞ்சலிங்கமும் நிகழ்த்தினர். சங்கத்தின் தலைவரான ஜெயமுகுந்தன் அவர்கள், தொழிலதிபர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் பொதுவான கனடிய சமூகத்திற்கும் உரும்பிராய் பாடசாலைகளுக்கும் செய்த நிதி உதவிகளைப்பற்றி வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

செல்வி. கவிசா வைகுந்தனின் நெறியாள்கையில் நடைபெற்ற இராக சங்கமம் நிகழ்வில் வீணைக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து திரு. ஜெயந்திராஜா தம்பிராஜாவின் சிறப்புரையும், "சரஸ்வதி நர்த்தனாலயா" ஆசிரியை பரதகலா வித்தகர் ஸ்ரீமதி. சுபிதா ரத்மேனன் அவர்களின் மாணவிகள் வழங்கிய நடனமும், "சாயி நிருத்திய நாட்டியக் கலாசாலை" ஆசிரியை நாட்டியக் கலைமணி பரதகலா வித்தகர் ஸ்ரீமதி. சுஜீவி மகாதேவன் மாணவிகளின் நடன விருந்தும் சிறப்பாக இடம் பெற்றது. செல்வி. வந்திகா நிற்சுதனினின் இன்னிசை விருந்தும் ரசிக்கும் படியாக இருந்தது.

கணிதம், ஆங்கிலப் போட்டிகளை வெற்றிகரமாக நடாத்துவதற்கு காரணமாக இருந்த தொண்டர்களுக்கான கௌரவிப்பும் பிரத்தியேக நிகழ்வாக நடைபெற்றது. "சந்திரசேகரம் நாட்டிய சங்கீத கலைக்கூடம்" ஆசிரியை ஸ்ரீமதி. அனுசியா ஜெயன் அவர்களின் மாணவிகளின் அற்புதமான நடன நிகழ்வும் இடம் பெற்றது. சிறப்புப் பேச்சாளராக வந்த திரு. மோகனசுந்தரம் அவர்களை பாராட்டி, மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. "நகைச்சுவை அருவி" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. "உள்ளதைச் சொல்லவா" என்ற நகைச் சுவை நாடகம் தமிழர் மத்தியில் பிரபலமான பல்கலை வித்தகர் திரு.கணபதி. ரவீந்திரன் தயாரிப்பில் இடம் பெற்றது.

அடுத்து பட்டிமன்றப் பேச்சாளரும், நடிகரும், கவிஞருமான நகைச்சுவை நயாகரா என அழைக்கப்படும் மோகனசுந்தரம் வழங்கிய பேச்சு இடம் பெற்றது. தனது நகைச்சுவைப் பேச்சால் பார்வையாளர்களை வாய் விட்டுச் சிரிக்க வைத்தார். தனது பேச்சினூடே சிறந்த கருத்துக்களையும் முன் வைத்தார். நிகழ்ச்சி முடிவில் பார்வையாளர்களுக்கான அதிஸ்ட்ட லாபச் சீட்டு இழுப்பில் 10க்கு மேற்பட்ட பெறுமதியான பரிசுப் பொருட்கள் வழங்கப் பட்டன. இறுதியாக நன்றியுரை சங்கத்தின் செயலாளர் திரு. வரதராஜன் தம்பித்துரையால் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளை அழகாக செல்வி. கவிஷா உதயனன், செல்வன் லதீஷன் கிரிகரன், திரு. ஜெயக்குமார் சிந்தாமணி ஆகியோர் தொகுத்து வழங்கினர்.



அங்கு உரையாற்றிய பலரது உரைகளிலிருந்து பல முக்கிய விடயங்களை கவனிக்கக் கூடியதாக இருந்தது.

கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியவர்கள் அனைவரும், உரும்பிராய் கல்லூரிகள், பாடசாலைகளில் படித்த பழைய மாணவர்களின் பிள்ளைகள் என்பது சிறப்பான விடயம். ஏறக்குறைய தாயகத்தில் உள்ள 4 பாடசாலைகளின் வளர்ச்சிக்கு இச்சங்கத்தினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறார்கள். நிர்வாக உறுப்பினர்கள் தலைவர், செயலாளர் உட்பட ஒவ்வொரு வருடமும் மாற்றப் பட்டு வருவதும் சிறப்பான அம்சம். ரொறொண்ரோ மாநகரில் முதன் முதலாக பொங்கல் விழாவைக் கொண்டாடியவர்கள் என்ற பெருமையை உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் கனடாசங்கம் பெறுகின்றது. தற்போது, கனடிய அரசாங்கங்களால் தைமாதம் மரபுத் திங்களாகக் கொண்டாடப் படுவது குறிப்பிடத்தக்குது. இந்தச் சங்கம் 30 ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கி வருவதற்கு முக்கிய காரணம் ஒற்றுமை எனலாம்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

**- படங்கள்: சத்தியன்**













# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1084



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கைலாசநாதர் திருக்கோயில் (நல்லூர் சிவன்கோயில்) நல்லூர், யாழ்ப்பாணம

*" திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலைத்*
*தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்*
*குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை*
*கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்*
*பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்*
*பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்*
*அருமணியை ஆரூரி லம்மான் தன்னை*
*அறியாதடி நாயே னயர்த்தவாறே. "*

உலகிலே தோன்றிய பல மதங்களின் காலத்தையும், யாரால் இம்மதங்கள் தோற்றுவிக்கப்பட்டதெனவும் வரையறுத்துக் கூறமுடியும். ஆனால் சனாதனதர்மம் எனப் போற்றப்படும், இந்துமதத்தின் காலத்தையோ அன்றி யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதையோ கூற ஆதாரங்கள் அமையவில்லை. மனிதன் தனது வாழ்வு நெறியை ஆரம்பித்தபோது, இயற்கையாக மலர்ந்த வாழ்வுநெறியாக, இந்துமதத்தைக் கருதமுடியும். ஆயினும், பிற்காலத்தில் இந்துமதம் பல்வேறு பிரிவுகளாகப் பிளவுபட்டுக் காணப்பட்டது. இதனை நீக்கி இந்துமதத்தை சைவம், சாக்தம், வைணவம், காணபதியம், கௌமாரம், சௌரம் என அறுவகைச் சமயங்களாக்கி, வேறுபாட்டை நீக்கி, சமயசமரசத்தை, ஸ்ரீசங்கரர் எற்படுத்தியுள்ளார்.

இவற்றுள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம், சைவம் என அழைக்கப்படுகின்றது. இறைவன் எழுந்தருளியுள்ள இடங்களை ஆலயம் என்றும், கோயில் என்றும் அழைப்பர். மானிட சரிரத்தின் வெளிப்பாடாக ஆலயங்கள் காணப்படுகின்றன. மானிடசரீரமே ஆலயங்களுள் மிகவும் உயர்ந்தது. மேன்மைமிக்கது. இதனையே திருமூலர், "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார். அண்டசராசரங்களெங்கும் உறையும் தெய்வம், மானிட சரீரத்திலும் வீற்றிருக்கின்றது. இத்தத்துவத்தை சாதாரண மக்கள் புரிந்து கொள்வது கடினம். இறைதத்துவத்தை படித்தவர்கள் மட்டுமல்ல, பாமரர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில், ஆன்றோர்கள் ஆலயங்களை உருவாக்கினர்.

ஆன்மீக நிலையில் இருநிலைகள் காணப்படுகின்றன. ஒன்று அறிவும், ஞானமும் மேம்பட்டோர் நிற்கும் ஞானநிலை. இந்நெறி நிற்பவர்கள் மிக அரிதாகவே காணப்படுவர். ஏனையோர் கிரியை நெறி சார்ந்து நிற்பவர்கள். மனிதநாகரிக வளர்ச்சிப்படியில் மக்களைப்பற்றிச் சிந்தித்த ஞானிகள், கோயில், திருவுருவம், வழிபாட்டு முறைகள் என்பவற்றை ஏற்படுத்தினர் இவ்வாறான அடிப்படையான நெறிகளைக் கொண்டதாக இந்துசமயம் விளங்குகின்றது. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயம் மிகவும் தொன்மையானது. "சைவம் சிவனுடன் சம்பந்தமாவது" என திருமூலர் சைவத்திற்கு இலக்கணம் கூறியுள்ளார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு, முழுமுதற் கடவுளாகப் போற்றப்படும் சிவனுக்குரிய ஆலயங்கள் பாரெங்கும் காணப்பட்டுள்ளன. சிவவழிபாடு வேதகாலத்திற்கு முந்திய வழிபாடென ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஏறக்குறைய கி.மு. 5ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும், சிந்துவெளி நாகரிகத்தை ஆராய்ந்த அறிஞர், சேர் ஜோண் மார்சல் என்பவர், "இன்றளவும் வழக்கிலுள்ள மிகப்பழைய சமயமாக சைவசமயம் விளங்குகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய தொன்மையான சைவசமயம் ஈழத்திலும் உயர்நிலையில் இருந்ததை, இதிகாச, புராண வரலாறுகள் தெளிவாக்கியுள்ளன. ஈழத்தின் ஆதிக் குடிகளாகக் கருதப்படும் இயக்கர், நாகர் ஆகியோர் சிவ வழிபாட்டைக் கடைப்பிடித்துள்ளனர். ஈழத்தின் வடபால் அமைந்து, தமிழர்களின் இராசதானியாக விளங்கியது, யாழ்ப்பாண இராச்சியம். இதன் தலைநகராக நல்லூர் காணப்பட்டது. அன்னியர் படையெடுப்பின் முன், ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு, யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்துள்ளனர். தமிழ் இராச்சியமாக மட்டுமன்றி, இங்கு காணப்படுகின்ற கோயில்களும், இவ்வூரின் பெருமைக்குச் சான்றாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தின் தலைநகராக விளங்கிய நல்லூர், ஒரு கோயில் நகரமாகும். நல்லூர் பதியை, ஈழநன்மண்டலம் சேர் பொன்னுலகம் என்றும், பிறவிப்புன்மை இருள் நீக்கும் பதி என்றும், நல்லூர் வெண்பா குறிப்பிட்டுள்ளது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட அரசர்கள், நல்லூரை மையமாக வைத்து, கிழக்கில் வெய்யிலுகந்த பிள்ளையார் கோயில், தெற்கில் கைலாசநாத பிள்ளையார் கோயில், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோயில், வடக்கில் சட்டநாதர் கோயிலென, நாற்திசையும் கோயில்களை காவல் அரண்களாக்கி நல்லூர் கந்தசுவாமி கோயிலை அரண் செய்தனர்.

இவ்வாறு மன்னர்களால் போற்றி வளாக்கப்பட்ட நல்லையம்பதியில், பேரும் புகழும், அருளும் கொண்ட ஆலயமாக, நல்லூர் சிவன் கோயில் எனப் போற்றப்படும், கைலாசநாதர் ஆலயம் காணப்படுகின்றது. இவ்வாலயம் அமைந்துள்ள இடம், தமிழ் மன்னர்கள் காலத்திலே, "மின்னெறிஞ்சான் வளவு" எனக் குறிப்பிடப்பட்டது. எதிரிகள் தமிழ்மன்னர்களோடு போரிட்டகாலத்தில், இவ்விடம் போர்நடைபெற்ற களமாகவும் காணப்பட்டுள்ளது. இவ்வாறான குறிப்புக்களை, கைலாசநாதர் கோயில் தலபுராணமாகிய கைலாசநாதர் புராணம் குறிப்பிட்டுள்ளது.

தொடரும்...






OM NAMO NARAYANA

125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**26-01-2024 வெள்ளி தொடக்கம் 01-02-2024 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**மேஷம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும். இனிய தகவல் வந்து சேரும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். வசந்தம் தேடி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். திடீர் செலவு ஏற்படும். நட்பால் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பலன் தரும். பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். பிரச்சனைகள் அகலும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளம் மகிழும். கமி'ன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K





**ரிஷபம்:** வம்புதும்புகள் ஒழியும். தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீர்வு தரும். வியாபாரம் சிறக்கும். பங்குச்சந்தையில் லாபம் வரும். பயணம் அனுகூலம் தரும். முயற்சிகள் பலன் தரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்துக்கள் சேரும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் மறையும். விடாமுயற்சி அவசியம். உடல் உபாதைகள் நீங்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். வேலை பளு குறையும். மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. தனவரவு பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**மிதுனம்:** நினைத்த காரியம் நிறைவேறும் வாரம். தன்னம்பிக்கை கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். தோஷங்கள் ஒதுங்கும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வீண் வம்பு உருவாகும். பழைய பாக்கி வசூலாகும். திறமைகள் வெளிப்படும். புதிய முதலீடு லாபம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். வாகனத்தால் செலவு உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. உற்சாகம் அலைமோதும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதிகள் உயரும். பெற்றோரின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L




**கடகம்:** அதிகாரமான பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பட்டம் பதவி வந்து சேரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆதாயம் பெருகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன்தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பருப்பு தானம் பாவம் போக்கும். தொல்லைகள் விலகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்கள் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. செயல்களில் கவனம் தேவை. பாராட்டுக்கள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,O




**சிம்மம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். உயர் கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். உறவினரால் உதவி கிட்டும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உறவுகளால் நன்மை உண்டு. எடுத்த முயற்சி வெற்றி பெறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். முதல-ீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். சுபிட்ஷங்கள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம கூடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,4,2,8
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q




**கன்னி:** மங்களச் செய்தி வரும் வாரம். நெருக்கடிகள் குறையும். பழைய பகை தீரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். கல்வியில் மேன்மை உண்டு. கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்லத்தில் அமைதி பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். விவசாயம் பலன் தரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். கோரிக்கைகள் நிறைவேறும். பெற்றோர் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கை பிடிப்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நன்மதிப்பு கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். கடன் சுமை குறையும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தாராளமான தனவரவு உண்டு. கனவுகள் பலிதமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச் செலவு குறையும். நினைவாற்றல் பெருகும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 7,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M




**துலாம்:** வரவும், உறவும் வலிமையாகும். பகை மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணங்கள் பலன் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். மனச்சுமை குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அன்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளைத் தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். நிர்வாகப் பொறுப்பு கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அரசியல் ஆதாயம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெகுமானம் கிடைக்கும் காலம். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தன-வரவு உண்டு. செயல்திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடுகள் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W




**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருள் சேரும் வாரம். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல் நலம் சீராகும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். ஆழமான மேன்மைகள் அமையும். பயணம் அனுகூலம் தரும். பொருளாதாரம் உயரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பெண்களால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். திடீர் பயணம் லாபம் தரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பதவி உயர்வு தாமதமாகும். பயணத்தில் கவனம் தேவை.

(தொடர்ச்சி 26 பக்கம்)




# அன்பின் தொனி - 721

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை** - Grace of God

**சாலொமோனுடைய நீதிமொழிகள்**

**மூடனுக்கு அவனுடைய மதியீனத்தின்படி மறுஉத்திரவு கொடுக்காதே**

கோடைக்காலத்திலே உறைந்த பனியும், அறுப்புக்காலத்திலே மழையும் தகாததுபோல, மூடனுக்கு மகிமை தகாது. அடைக்கலான் குருவி அலைந்துபோவதுபோலவும், தகைவிலான் குருவி பறந்து போவதுபோலவும், காரணம் இல்லாமல் சொன்னசாபம் தங்காது. குதிரைக்குச் சவுக்கும், கழுதைக்குக் கடிவாளமும், மூடனுடைய முதுகுக்குப் பிரம்பும் ஏற்றது. மூடனுக்கு அவனுடைய மதியீனத்தின்படி மறுஉத்திரவு கொடுக்காதே; கொடுத்தால் நீயும் அவனைப் போல ஆவாய். மூடனுக்கு அவனுடைய மதியீனத்தின்படி மறுஉத்திரவு கொடு; கொடுக்கா விட்டால் அவன் தன்னுடைய பார்வைக்கு ஞானியாக இருப்பான். மூடன் கையிலே செய்தி அனுப்புகிறவன் தன்னுடைய கால்களையே வெட்டிக்கொண்டு நஷ்டத்தை அடைகிறான் நொண்டியின் கால்கள் குந்திக்குந்தி நடக்கும், அப்படியே மூடர்களின் வாயிலுள்ள உவமைச்சொல்லும் குந்தும். மூடனுக்கு மரியாதை கொடுக்கிறவன் கவணிலே கல்லைக்கட்டுகிற வன்போல் இருப்பான். மூடன் வாயில் அகப்பட்ட பழமொழி வெறியன் கையில் அகப்பட்ட முள். பலத்தவன் அனைவரையும் நோகச்செய்து, மூடனையும் வேலைவாங்குகிறான், மீறி நடக்கிறவர்களையும் வேலைவாங்குகிறான். நாயானது தான் கக்கினதை சாப்பிடும்படித் திரும்புவதுபோல, மூடனும் தன்னுடைய மூடத்தனத்திற்குத் திரும்புகிறான். தன்னுடைய பார்வைக்கு ஞானியாக இருப்பவனைக் கண்டால், அவனைவிட மூடனைக்குறித்து அதிக நம்பிக்கையாக இருக்கலாம்.

**சோம்பேறி தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ளவன்.**

வழியிலே சிங்கம் இருக்கும், நடுவீதியிலே சிங்கம் இருக்கும் என்று சோம்பேறி சொல்லு வான். கதவு கீல்முளையில் ஆடுகிறதுபோல, சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருக்கிறான். சோம்பேறி தன்னுடைய கையைக் கலத்திலே வைத்து அதைத் தன்னுடைய வாய்க்குத் திரும்ப எடுக்க வருத்தப்படுகிறான். புத்தியுள்ள மறுஉத்திரவு சொல்லத்தகும் ஏழுபே ரைவிட சோம்பேறி தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ளவன். வழியிலே போகும்போது தனக்கு சம்மந்தமில்லாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்து இழுக்கிறவனைப்போல இருக்கிறான். கொள்ளிகளையும் அம்புகளையும் சாவுக்கேதுவானவைகளையும் எறிகிற பைத்தியக்காரன் எப்படியிருக்கிறானோ, அப்படியே, தன்னோடு இருந்தவனை வஞ்சித்து: நான் விளையாட்டுக்கல்லவோ செய்தேன் என்று சொல்லுகிற மனிதனும் இருக் கிறான்.

**கோபக்காரன் சண்டைகளை மூட்டுகிறதற்கு ஏதுவானவன்.**

விறகில்லாமல் நெருப்பு அணையும்; கோள்சொல்லுகிறவன் இல்லாமல் சண்டை அடங்கும். கரிகள் தழலுக்கும், விறகு நெருப்புக்கும் ஏதுவானதுபோல, கோபக்காரன் சண்டைகளை மூட்டுகிறதற்கு ஏதுவானவன். கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப்போல இருக்கும் ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் குத்தும். நேச அனலைக் காண்பிக்கிற உதடுக ளோடு கூடிய தீயநெஞ்சம் வெள்ளிப்பூச்சு பூசிய ஓட்டைப்போல இருக்கும். பகைஞன் தன்னுடைய உள்ளத்தில் கபடத்தை மறைத்து, தன்னுடைய உதடுகளினால் சூதுபேசுகிறான். அவன் தாழ்மையாக பேசினாலும் அவனை நம்பாதே.

**- நீதிமொழிகள் 26: 1- 25**

**தொடரும்...**



## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A




**தனுசு:** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவி யோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வ பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். இரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடைவீர்கள். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப் பலன் கூடும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. ஆபத்துக்கள் விலகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். நலம் விளையும் வாரம். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். தேக பலம் கூடும். திருமண முயற்சி வெற்றி பெறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். முகப்பொலிவு கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெயர். புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். தொழில் வளம் கூடும். முற்போக்கு சிந்தனை வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாருதி (அனுமன்), அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,F




**மகரம்:** புதிய எண்ணங்கள் உருவாகும் வாரம். குளிர்பான தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். நன்மையான காலம். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கர்ம வினைகள் அகலும். பணக்கட்டுப்பாடு அவசியம். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரார்த்தனைகள் நிறைவேறும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு உயரும். பாக்கிகள் வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலி கருப்புசுவாமி, அதிர்ஷ்ட எண்: 3,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**கும்பம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். எதிரிகள் உதிரியாவார்கள். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பாதகமாக சூழ்நிலைகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உடல்நலம் திருப்தி தரும். பெருமிதம் நிறைந்த காலம். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். சாதனை படைக்கும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெரும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். பூமியால் நன்மை உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும் வெகுமதியும் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,7,9,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,L




**மீனம்:** தலைசிறந்த பதவி கிடைக்கும் வாரம். எண்ணம் கைகூடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். அற்புதமான காலம். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. பொறாமைகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்கள் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை மாறும். வார்த்தைகளில் நிதானம் தேவை. செயல்களில் பொறுமை தேவை. சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். உடல்நலம் மேம்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K

# "ரொறன்ரோவின் மனித நேயக் குரல்" (TORONTO VOICE OF HUMANITY) அமைப்பின் சார்பில் வவுனியா "காணாமல் ஆக்கப்பட்டோரின்" அன்னையருக்கு உலர் உணவுப் பொருட்கள் கையளிக்கப்பெற்றன




ரொறன்ரோவில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இயங்கிய வண்ணம் தாயகத்திலும் தமிழகத்திலும் மனித நேயப் பணிகளை மேற்கொண்டுவரும் "ரொறன்ரோவின் மனித நேயக் குரல்" (TORONTO VOICE OF HUMANITY) அமைப்பின் சார்பில் வவுனியாவில் அலுவலகத்தை அமைத்து கடந்த பல வருடங்களாக கண்ணீரும் கம்பலையுமான தமது உறவுகளைத் தேடி குரல் எழுப்பி வரும் "காணாமல் ஆக்கப்பட்டோரின்" அன்னையருக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு 23-01-2024 அன்று நடைபெற்றது.

வவுனியாவில் இயங்கிவரும் இந்த அமைப்பின் செயலாளர் திரு. ராஜ்குமார் தலைமையில் முன்னெடுக்கப்பெற்ற இந்த நிகழ்வில் 80 அன்னையருக்கு தலா 2500 ரூபாய்கள் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் கையளிக்கப்பெற்றன. அந்த இடத்தில் ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பினருக்கும் நன்றி தெரிவிக்கப்பெற்றது.







# தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடா உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பின்னர் சிவஞானம் சிறீதரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்களின் இந்த வெற்றி தமிழ் தேசிய உணர்வை பறைசாற்றி உளது. உங்களின் தலைவர் தேர்வு நீங்கள் தமிழ் தேசியம்மீது கொண்ட உறுதிப்பாட்டையும் அர்ப்பணிப்பு மிக்க மக்கள் சேவையையும் உறுதி செய்துள்ளது. தமிழ்த்தேசிய உணர்வாளர்களை ஒன்றிணைத்து ஈழத்தமிழர் உரிமைக்காக போராட காலம் உங்களுக்களித்த பொன்னான வாய்ப்பு இதுவாகும். ஈழத்தமிழரின் உரிமைமீட்பில் அனைத்து கட்சிகளுடனும் அமைப்புகளுடனும் நாமும் தொடந்தும் தோள்கொடுப்போம் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன்.

முதற் தடவையாக கட்சித் தலைவர் தெரிவில் மக்கள் ஆட்சி முறைத் தேர்வுமூலம் தெரிவு செய்தமை ஜனநாயகம் மீது பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் தகமையானவர்களுக்குள் ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்படும்போது பலமாக வளைர்ச்சி பெறுவதுடன் சீரான கூட்டுத் தலைமையையும் உருவாக்கும்.

இதேவேளை தலைவர் தேர்வில் போட்டியிட்டு ஜனநாயக முறைமைக்கு வலுசேர்த்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர். எம்.ஏ. சுமந்திரன் அவர்களுக்கும் கௌரவ மேனாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் வழியில் சென்று கட்சியை புத்தெழுச்சி கொள்ளும் வகையில் உங்கள் பணி அமையுமென்பதில் எனக்கு அசைக்கவியலாத நம்பிக்கை உண்டு.

தோழமையுடன்,
நிமால் விநாயகமூர்த்தி,
நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர், கனடா.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION

## Building a Strong Foundations through Our Mortgage financial Solutions.



**Contact Us Today**

**NESAN 416-908-5656**

*Subramaniam*

| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity Line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

Mortgage Alliance — RightBroker = RightMortgage — Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · National Bank · First National Financial LP · MCAP · Home Trust · Equitable Bank · RFA · radius financial · RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பலசரக்குகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
·Loans
·Cash
·Debt Consolidation
·1st & 2nd Mortgage
·Home Renovation Loan
·Equity Loans
No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record

PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000

416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 ஆண்டுகள்
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

உதயம் 1451 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 26, 2024

## உரும்பிராய் இந்து பழைய மாணவர் சங்கம் – கனடா நடத்திய 30வது பொங்கல் விழாவில் தொழிலதிபர் சாந்தா பஞ்சலிங்கத்தின் பன்முகப் பங்களிப்புக்களுக்கு பாராட்டு

உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா, தங்களது 30வது ஆண்டு பொங்கல் விழாவை கடந்த 20-01-2024 சனிக்கிழமை அன்று ஸ்காபறோ மாநகரில் அமைந்துள்ள தமிழ் இசைக் கலாமன்ற அரங்கில் வெகு சிறப்பாகக் கொண்டாடியது. சிறப்புப் பேச்சாளராக பட்டிமன்ற நட்சத்திரப் பேச்சாளர் திரு. மோகனசுந்தரம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேற்படி விழாவில் தொழிலதிபர் சாந்தா பஞ்சலிங்கம் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராக இருந்தாலும் உரும்பிராயில் உள்ள பல பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உதவிகளை வழங்கியதோடு கனடாவிலும் பல அமைப்புக்களின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார் என்பதை பலர் சுட்டிக் காட்டினார்கள்.

(உள்ளே செய்தி 22ம் பக்கத்தில்)



## "தமிழரசுகட்சி, சுமந்திரனை தலைமைப் பதவி தேர்தலில் தோற்கடித்ததை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். எனினும், அவரை தமிழ் அரசியலில் இருந்தும் அகற்றுவதும் இன்றியமையாதது."

### தமிழர் தாயக காணாமல் ஆக்கப்படோரின் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவிப்பு



"தமிழரசுகட்சி, திரு.சுமந்திரனை தலைமைப் பதவிக்கான தேர்தலில் தோற்கடிக்கச் செய்ததை அறிந்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எனினும், அவரை தமிழ் அரசியலில் இருந்து முற்றாக அகற்றுவதும் இன்றியமையாதது. அவர் தமிழினத்திற்கு ஒரு அச்சுறுத்தல் நிறைந்தவர். மற்றும் நமது சுதந்திரத்திற்கு தடையாக செயல்படுகிறார்.

(உள்ளே செய்தி 20ம் பக்கத்தில்)

## தமிழ்நாடு அரசு நடத்திய அயலகத் தமிழர்களுக்கான மாநாட்டில் சிறந்த கல்விச் சேவையாளருக்கான விருதினைப் பெற்ற படிமுறைத்தமிழ் ஒன்றியத் தலைவர் திரு. பரமநாதன்



அண்மையில் சென்னையில் தமிழ்நாடு அரசு நடத்திய அயலகத் தமிழர்களுக்கான மாநாட்டில் சிறந்த கல்விச் சேவையாளருக்கான அரசின் விருதினைப் பெற்ற படிமுறைத்தமிழ் ஒன்றியத் தலைவர் அவுஸ்திரேலியா வாழ் திரு. பரமநாதனுக்கு உலகெங்கும் இருந்து வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

இவ்வாண்டிற்கான சிறந்த கல்விச்சேவையாளருகான தமிழக அரசின் விருதினைப் பெற்ற படிமுறைத்தமிழ் பாடத்திட்டத்தை அறிமுகம் செய்தவர் கனடா வாழ் சுப்பிரமணியம் இராஜரட்ணம் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்படும் படத்தில் தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் துறைக்கான அமைச்சர் செஞ்சி மஸ்தான் மற்றும் கனடா ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி அவர்களும் காணப்படுகின்றார்கள்.

## Canada to stabilize growth and decrease number of new international student permits issued to approximately 360,000 for 2024

## கனடா 2024 ல் சுமார் 360,000 புதிய சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி எண்ணிக்கையைக் குறைக்க கனடிய குடிவரவு, மற்றும் குடியுரிமை அமைச்சர் நடவடிக்கை



"கனடாவிற்கு முறையான அனுமதி பெற்று வருகின்ற சர்வதேச மாணவர்கள் எங்கள் கனடாவில் உள்ள சமூகங்களை நன்கு வளப்படுத்துகிறார்கள் மற்றும் கனடாவின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார கட்டமைப்பில் முக்கியமான பங்கு வகிப்பவர்களாகவும் உள்ளனர். கடந்த சில ஆண்டுகளில், சர்வதேச மாணவர்களின் வருகை கனடாவின் ஒருமைப்பாடு மற்றும் கட்டுப்பாடு போன்றவைகளுக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. சில நிறுவனங்கள் வருவாயை ஈட்ட மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதிலேயே கவனமாக உள்ளார்கள். இதனால் முறைகேடுகள் கணிசமாக அதிகரித்துள்ளன, மேலும் அதிகமான மாணவர்கள் வெற்றிபெறத் தேவையான சரியான ஆதரவின்றி கனடாவிற்கு வருகிறார்கள்.

(உள்ளே செய்தி 5ம் பக்கத்தில்)

## தமிழ்நாட்டின் புகழ்பெற்ற "மாயாஜால நட்சத்திரம்" சாக் வசந்த் கலந்து சிறப்பிக்கும் சிறப்பான விழா

வள்ளிக்கண்ணன் மருதப்பன் தனது குழுவினருடன் இணைந்து "கனடா தமிழ்ச் சங்கத்தின்" பெயரோடு நடத்தும் மாபெரும் விழா!அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளும் வழங்கப்பெறவுள்ளன. 416 880 6051




## City of Vaughan, hosted 'Tamil Heritage Month Celebrations'

## கனடாவின் வோன் மாநகர சபை நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்"



கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள வோன் மாநகரில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் பல்வேறு வகையான பங்களிப்புக்களும் சாதனைகளும் அந்த நகரத்தின் வளர்ச்சிக்கு பெரும்பங்காக விளங்குகின்றன.

இதைக் கருத்திற் கொண்டு மேற்படி மாநகர சபையும் அதன் நகரபிதாவும் மற்றும் அங்கத்தவர்களும் எமது தமிழ் மக்களின் கலை மற்றும் கலாச்சாரப் பண்புகளை மதிக்கும் வகையில் இந்த "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டத்தை கடந்த சில வருடங்களாக நடத்தி வருகின்றனர்.

(உள்ளே செய்தி 16ம் பக்கத்தில்)